
கல்கி



LKI ஜூலை 1. 1943 4 அண



கஸ்தூரி மில்ஸ், மானேஜிங் ஏஜெண்ட்ஸ் மகா-ா-ா-ஸ்ரீ கே. உத்தம ராமசாமி நாயுடு அவர்கள் செல்வப் புதல்வி ஜெயலெட்சுமிக்கும், புளியம்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ ம. கிருஷ்ணம நாயுடு அவர்கள் திருநிறைச் செல்வர் கே. கோவிந்தராஜுலு அவர்களுக்கும் 21-6-43ல் கோயமுத்தூர் ரேட்பீல்ட்ஸ் "செல்வ நிலையம்" பங்களாவில் வெகு சிறப்பாக விவாஹம் நடந்தேறியது.

டி விவாஹ முகூர்த்தத்திற்கும் அன்று நடந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்பு லெட்சுமியம்மாளின் சங்கீதக் கச்சேரிக்கும் கும்பகோணம் ஸ்ரீமதி பானுமதியவர்கள் பரத நாட்டியத்திற்கும் கோயமுத்தூரி லிருந்தும், வெளியூர்களி லிருந்தும் பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தம்பதிகளுக்கு செட்டி நாட்டு ராஜா அவர்கள் உட்பட அநேக பிரபலஸ்தர்களால் வாழ்த்துச் செய்திகளும் வெகுமதிகளும் வழங்கப்பட்டது.

கஸ்தூரி மில் தொழிலாளர்களுக்கு சாப்பாடும் ஆடை முதலியது களும் வழங்கப்பட்டது.


கொலம்பியா ரிகார்டுகளில்



ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், . . . மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்.

S. கண்ணன் & கம்பெனி, திருச்சிறாப்பள்ளி.



பெட்ரோல் ரேஷனிங் கடுமையாக இருக்கும் இந்நாளில் இது ஒரு சாகஸம் தான்! என் காருக்கு T. V. S. ப்ரொட்யூஸர் கியாஸ் பிளாண்ட் இணைத்திருப்பதால்தான் நான் இவ்வளவு தூரம் போய்வர முடிந்தது. செலவில் கிட்டத்தட்ட முக்கால்பங்கு குறைவு. ஓட்டுவதும் வெகு இலகுவாக இருந்தது.

இன்ஜினீயரிங் காலேஜைச் சேர்ந்த லேபரேடரியில் சென்னை சர்க்காரால் T.V.S. பிரயாணி கார் கியாஸ் பிளாண்டுகள் பரீக்ஷை செய்யப்பட்டன. தூசி சேராமலிருக்கிறதா, ரஸ்தாவில் தொந்தரவின்றி ஓடுகிறதா, சுத்தமான கியாஸ் கிடைக்கிறதா என்ற விஷயங்களில் பரீக்ஷை செய்ததில், ஒவ்வொன்றிலும் மேன்மையானதுதான் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது. வேறெந்த கியாஸ் பிளாண்டும் இப்பரீக்ஷைகள் எல்லாவற்றிலும் திருப்தியளிக்கவில்லை.

தென்னிந்தியாவில் மற்றெந்த கியாஸ் பிளாண்டையும்விட T. V. S. பிரயாணி கார் கியாஸ் பிளாண்டுகள் அதிகமாக உபயோகத்திலிருப்பதின் காரணம் இப்பொழுது தெரிகிறதா?

பிரதான அம்சங்கள்

- ஸ்டார்டிங் அதி சுலபம் :—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- மும்முறை வடிகட்டும் வசதி :—சுத்தமான கியாஸ் கிடைக்கிறது.
- இலவச சர்வீஸ் :—இந்தியாவின் பல பாகங்களிலுள்ள எங்கள் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் இலவச சர்வீஸ் எப்பொழுதும் அளிப்பார்கள்.
- குறைந்த கனம் :—சம கனமாக இருப்பதால் டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- நேர்த்தியான தோற்றம் :—சிறந்த அமைப்பு. அழகான தோற்றம்.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

வாங்குமுன்
மாதிரிகளைப்


T·V·S

கியாஸ் பிளாண்ட்
பாருங்கள்

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)


T. V. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ், லிமிடெட்,
மதுரை & சென்னை.

T. V. S.—K. 6 T.M.



103 வருஷங்களுக்குமுன்

ஸிம்ஸன் கம்பெனியார்
கோச் வண்டிகள் செய்து
கொண்டிருந்தார்கள்!



இன்று

ஸிம்ஸன் கம்பெனியாரின் தடங்கலில்லாத சேவைகள், காலத்துக்கு ஏற்றவாறு முன்னேற்ற மடைந்திருக்கின்றன. திருப்தி அளிக்கும் சேவைதான் எப்போதும் நிலையாய் இருக்கும். ஸிம்ஸன் கம்பெனியார் அதே நோக்கத்துடன்தான் உங்களுக்கு சேவை செய்து வருவார்கள்.

ஸிம்ஸன் & கம்பெனி லிட்
மோட்டார் இஞ்ஜினியர்ஸ்
மவுண்ட் ரோட் — மதராஸ்






DALDA
VANASP

கல்கி
பொருளடக்கம்

மலர் 2 இதழ் 34 | 1943 ஜூலை 1 | சுபானு ௵ ஆனி 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.




பூதலம் உற்றிடும் வரையும் — அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும் — பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்

என்று பாரதியார் பாடிய இராஜ புத்திர வீரத்தின் அறிகுறியாக இன்றளவும் விளங்குவது நமது அட்டைப் படத்தில் உள்ள வெற்றிக் கோபுரம். மேவார் ராஜ்யத்திலுள்ள சித்தூர் கோட்டையில் கும்ப ராணு என்னும் அரசன் தான் போரில் அடைந்த பெரும் வெற்றியின் ஞாபகார்த்தமாகக் கட்டியது இது. இந்தக் கும்ப ராணுவின் பத்தினிதான் பக்த மீராபாய் என்று கர்ண பரம்பரை வரலாறுகள் கூறுகின்றன.

போட்டோ: எல்லிஸ் ஆர். டங்கன்.

.... "பார்ப்பவர் மனதைப் பரிசுத்தமாக்கும் படம்" ....
.... "எல்லா விதத்திலும் சிறந்த படம்" ....
"ரொம்ப ரொம்ப வேடிக்கையான விஷயங்கள் நிறைந்த படம்"
என்று மூன்று பிரமுகர்கள் எழுதுகிறார்கள்.



குபேர குசேலா

ஜுபிடர் பிக்சர்ஸ் சிருஷ்டி!

டைரக்ஷன்: R. S. மணி, B. S. ராமையா

★

P. U. சின்னப்பா - T. R. ராஜகுமாரி
S. R. ஜானகி, பாபநாசம் சிவன், P. S. கோவிந்தன்
M. K. மீனலோசனி, N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்

மூன்றாவது வாரம்!

மதுரை	-	சிந்தாமணி	திருச்சி	-	வெலிங்டன்
காரைக்குடி	-	நடராஜா	கோயமுத்தூர்	-	ராஜா & டைமண்ட்
கும்பகோணம்	-	ராஜா	விருதுநகர்	-	ராதா
திருநெல்வேலி	-	ராயல்	பெங்களூர்	-	சிவாஜி

சென்னை பாரகனில் இரண்டாவது வாரம்

★

ஸௌத் இந்தியா பிக்சர்ஸ் ரிலீஸ்

சென்னை நகர உரிமையாளர்: தி சந்திரா டாக்கீஸ் லிமிடெட், மதராஸ்

"குபேர குசேலா" பாடல்களைக் "கொலம்பியா" ரிகார்டுகளில் கேளுங்கள்.

கல்கி

மலர் 2 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 34

என்ன சேதி?

பிரசார தந்திரம்

பிரசார தந்திரத்தில் ஜெர்மன் பிரசார மந்திரி கெப்பல்ஸ் என்பவர்தான் படலே கெட்டிக்காரர். அவரை மிஞ்சக் கூடியவர்கள் யாரும் கிடையாது என்று சொல்லி வந்தார்கள். ஆனால் கொஞ்ச காலமாக இரண்டாவது போர்முனை ஏற்படுவதற்காக ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் செய்து வரும் பிரசாரத்தைப் பார்க்கும்போது கெப்பல்ஸ் ஸ்டாலினுக்கு முன்னால் எந்த மூலை என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

ஐரோப்பாவில் இரண்டாவது முனை சீக்கிரம் ஏற்படுவது ரஷ்யாவுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதில் சந்தேகமே யில்லை. இந்த இரண்டு வருஷங்களாக ஜெர்மன் ராட்சஸப் படைகளின் எதிர்ப்புப் பளு முழுவதையும் ரஷ்யா தன்னந் தனியாகத் தாங்கி வந்திருக்கிறது. இதனால் ரஷ்யாவுக்கு ஏற்பட்ட பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் சொல்லி முடியாது. இன்னொரு தேசமாயிருந்தால் இந்த இரண்டு வருஷங்களாக இரண்டாவது முனை ஏற்படுத்தி வைக்காததற்காக பிரிட்டனையும், அமெரிக்காவையும் பகைத்துக் கொண்டிருக்கும். "பிரிட்டனையும், அமெரிக்காவையும் நம்பக்கூடாது. இவர்களை நம்பினால் மண் குதிரையை நம்பி கட்டாற்றில் இறங்கின மாதிரிதான். இரண்டாவது முனை ஆரம்பிக்கிறேன், ஆரம்பிக்கிறேன் என்று சொல்லி மழுப்பிக் கொண்டே வருகின்றனர். இவர்கள் என்றைக்கு இரண்டாவது முனையை ஆரம்பித்து வைக்கப் போகின்றனர்? கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்?" என்று இந்த ரீதியில் பகிரங்கமாகத் தங்கள் ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டிருப்பார்கள்.

பலே ஸ்டாலின்!

ஆனால் ஸ்டாலின் என்ன செய்கிறார்? என்ன சொல்கிறார்? ஸ்டாலின் பிரிட்டனைப் பார்த்தோ, அமெரிக்காவைப் பார்த்தோ ஒன்றும் சொல்லவில்லை. உலகத்தைப் பார்த்துத்தான் பேசுகிறார்:—

"ஏ உலகத்து மக்களே! இதோ பிரிட்டனையும், அமெரிக்காவையும் பாருங்கள்! அவர்களுக்கு உள்ள பலம் என்ன, வலிமை என்ன? அவர்கள் மேலும் மேலும் உற்பத்தி செய்து குவித்துக் கொண்டிருக்கும் தளவாடங்கள்தான் என்ன? இரண்டாவது முனை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் வெகு நல்ல சந்தர்ப்பம்தான் என்ன! இவ்வளவு நல்ல சந்தர்ப்பத்தை அவர்கள் கை நழுவ விட்டு விடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? மாட்டார்கள், ஒருகாலும் மாட்டார்கள். கட்டாயம் இரண்டாவது முனை கூடிய சீக்கிரம் ஏற்படுத்தத்தான் போகிறார்கள். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்" என்று இம்மாதிரி ரஷ்ய பிரசார நிலையம் தினசரி பிரசாரம் செய்து கொண்டு வருகிறது. அதோடு, பிரிட்டன், அமெரிக்கா இவற்றின் படை பலம், ஆகாய பலம், கப்பல் பலம் இவற்றுக்கும் புள்ளி விவரங்களைத் தந்து வருகிறது.

இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமலாவது பிரிட்டனும், அமெரிக்காவும் கூடிய சீக்கிரம் இரண்டாவது முனையை ஏற்படுத்தி விடலாம் என்று நமக்குத் தோன்றுகிறது.


ஆனால் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் என்ன தோன்றுகிறதோ?


ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் "இந்த ஆசாமி" என்னும் தலைப்புடன் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்கு நேயர்களிடமிருந்து அதிக வோட்டுக்கள் கிடைத்தது. பரிசு பெற்றவர் விலாசம்: ஆர். கே. வேதா பாய், கொண்டித்தோப்பு, சென்னை.


நிகழ்ச்சிச் சித்திரம்

-உம்மான்




மோட்டாருக்குப் பதிலாக
டாங்கிகளில் சவாரி செய்யலாம்.


ஆகாய விமானத்தில் இருந்து கொண்டு
தூரதிருஷ்டிக் கண்ணாடியோடு
அரசியல் நிலைமையைப் பரிசீலனை
செய்யலாம்.


இராணுவ வைஸராயின் ஆட்சியின் கீழ், பிரஜைகளின் (கால்) நடையும் இவ்விதம் மாறலாமல்லவா?

இராணுவ வைஸராய்!

அடுத்த வைஸராய் யாரா யிருக்கலா மென்பதைப் பற்றி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கும், டில்லியிலிருந்து மாகாணங்களுக்கும் வந்த தந்திச் செய்திகளுக்குப் பல லட்சம் ரூபாய் செலவாகி யிருக்கும். அந்தச் செய்திகளை இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரித்ததில் சில கோடி ரூபாய் செலவாகியிருக்கும்! அவ்வளவு பணத்தையும், — மேற்படி செய்திகளைப் படித்ததில் பொது ஜனங்கள் செலவிட்ட காலத்தையும் — படு நஷ்டமாகச் செய்துவிட்டு, பிரிட்டிஷ் மந்திரி சபையார் தளபதி வேவலை இந்தியாவின் அடுத்த இராஜப் பிரதிநிதியாக நியமித்திருக்கிறார்கள். இப்படிப் பத்திரிகை நிருபர்களுக்கெல்லாம் பட்டை நாமத்தைச் சாத்தி விட்டுத் தளபதி வேவலை நியமனம் செய்ததில் பிரிட்டிஷ் மந்திரி சபையார் இந்தியாவுக்கு ரொம்ப முக்கியத்தையும், பெரிய கௌரவத்தையும் அளித்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எப்படி யென்றால், இதற்கு முன்னால் இந்திய வைஸராய்ப் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களெல்லாம் பெரும்பாலும் வெளி உலகத்தைப் பொறுத்த வரையில் அநாமதேயங்களாகவே இருப்பார்கள். லார்ட் ஹார்டிஞ்சு, லார்டு செம்ஸ் போர்டு முதலிய பெயர்களை அவர்கள் பதவிக்கு வருவதற்கு முன்னால் வெளி உலகம் கேள்விப்பட்டதே யில்லை. லார்ட் ரெடிங் பெரிய நீதிபதி என்பதையும், லார்ட் லின்லித்கோ பெரிய விவசாயப் புலி என்பதையும் அவர்கள் நியமிக்கப்பட்டபோது பறையடித்துத் தெரிவிக்க வேண்டி யிருந்தது. (ஆனால் அவர்களுடைய இராஜ்ய பரிபாலனத்தில் அப்படி யொன்றும் நீதியோ, விவசாயக் கூர்மையோ வெளியாகிவிடவில்லை!) ஆனால் ஜெனரல் வேவலைப் பற்றி அப்படிப்பட்ட பறையடிப்புக்கு அவசியம் கிடையாது. அவரை அநாமதேயம் என்றும் சொல்வதற்கில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ரொம்பவும் பிரபலமாகி யிருக்கும் பெயர்களில் ஜெனரல் வேவலுடைய பெயரும் ஒன்று. இன்னும், இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து அவருடைய பெயர் ரொம்பவும் பிரபலப் பட்டிருக்கிறது. யுத்த ரங்கங்களில் எந்தெந்த இடத்தில் ரொம்ப அபாயமோ, எந்தெந்த இடத்தில் நிதானம், புத்தி, திறமை இவற்றுக்கு ரொம்பவும் தேவையோ, அங்கே யெல்லாம் ஜெனரல் வேவலை அனுப்பி வந்திருக்கிறார்கள்.

எந்த யுத்த ரங்கத்தில் ஆனாலும் சரி, ஜெனரல் வேவலின் வெற்றி என்றால், அது ஒரு தனி வெற்றிதான். ஜெனரல் வேவலின் தோல்வி யென்றால் அது ஒரு தனித் தோல்விதான். இன்னும், ஜெனரல் வேவல் பின் வாங்குகிறார் என்றாலும், அதைச் சாதாரணப் பின் வாங்குதலாகச் சொல்ல முடியாது; அது ஒரு தனி மகிமை பொருந்திய பின் வாங்குதலாய்த்தான் இருக்கும்! ''ஆஹா! எவ்வளவு அழகாய், என்ன அற்புதமாய்ப் பின் வாங்கினார்! என்ன அபாரப் பின் வாங்குதல்!'' என்ற புகழ்தான் ஏற்படும்.

இங்கிலாந்தில் இப்போது சர்ச்சில் வகித்துவரும் ஸ்தானத்துக்குச் சிலர் ஜெனரல் வேவலைக் குறிப்பிட்டார்கள் என்றால், அவருக்கு இங்கிலாந்தில் எவ்வளவு முக்கியத்துவம் உண்டு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அப்பேர்ப்பட்ட ஜெனரல் வேவலை யுத்த களத்திலிருந்து அகற்றி இந்தியாவின் வைஸராயாக நியமித்திருக்கிறார்கள் என்றால், பிரிட்டிஷ் மந்திரி சபையாரின் கருத்தில் இந்தியா எவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருக்கிறது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

''முக்கியத்துவம்'' என்று சொல்லும்போது, இராணுவ முக்கியத்தையே குறிப்பிடுகிறோம். ஜப்பானுடன் நடத்த வேண்டி யிருக்கும் கடுமையான பெரும் போரில் இந்தியாவுக்கு ஏற்படப் போகும் முக்கிய ஸ்தானத்தையே சொல்கிறோம். அந்த இராணுவ முக்கியத்துக்குத்தான் பிரிட்டிஷ் மந்திரி சபை கௌரவம் அளித்திருக்கிறது.

மற்றப்படி இந்த நியமனத்தினால், பிரிட்டிஷ் மந்திரி சபையானது இந்தியாவின் தேசியக் கோரிக்கையை அவமதித்து அலட்சியம் செய்திருக்கிறது என்பதில் சந்தேகம் கிடையாது.

"யுத்தத்தில் ஜயிப்பதற்கு இந்திய மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். அந்த ஒத்துழைப்பு தேசிய சர்க்கார் ஏற்படாமல் கிட்டாது. ஆகையால், தேசிய சர்க்காரை ஏற்படுத்துங்கள்" என்று இந்தியாவிலுள்ள சகலமான தலைவர்களும், பத்திரிகைகளும் கரடியாய்க் கத்திக் கொண்டு வருகிறார்கள்.

இந்த ஜெனரல் வேவல் நியமனத்தின் மூலம் பிரிட்டிஷ் மந்திரி சபை "உங்கள் ஒத்துழைப்பைக் கொண்டு உடைப்பிலே போடுங்கள்; யுத்தத்தை நாங்களாகவே ஜயிக்கப் போகிறோம்: இந்தியாவையும் ஆண்டு வரப் போகிறோம்" என்று தெரியப்படுத்துகிறது.

* * *

வைஸராய் வேவலின் ஆட்சியைப் பற்றி ஜோசியம் கூறுகிறவர்களில் சிலர், "ஒரு வேளை ஸிவிலியன் வைஸராய் சாதிக்காத காரியத்தைத் தளபதி வைஸராய் சாதிக்கக் கூடும். அரசியல் சமரசத்தை ஏற்படுத்தக் கூடும்" என்று கூறியுள்ளார்கள். இது இவர்களுடைய ஆசைக்கு அறிகுறியேயன்றி வேறில்லை.

இந்தியாவின் அரசியல் சமரசத்துக்குப் பெரிய விரோதி ஜெனரல் வேவல் என்பதையும், கிரிப்ஸ் தூது வந்தபோது சமரசத்துக்கு முட்டுக் கட்டை போட்டவர் ஜெனரல் வேவல் என்பதையும் மேற்படி ஆசைக்காரர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஜவாஹர்லால்ஜியும் மௌலானா ஆஸாதும் ஜெனரல் வேவலுடன் பேசிப் பார்த்து விட்டு வந்து, "அவர் இராணுவ விஷயமே பேசவில்லை: அரசியலைப் பற்றியே பேசுகிறார்" என்று சொன்னது பிரசித்தமான விஷயம்.

அந்த ஜெனரல் வேவல்தான் இப்போது இந்தியாவின் வைஸராயாக நியமிக்கப் பட்டிருக்கிறார். இதனுடைய கருத்து, "காங்கிரஸ் தலைவர்களுடன் சமரசப் பேச்சு என்பது கிடையாது" என்பதுதான்.

ஒரு வருஷத்துக்கு முன்னால் இங்கிலாந்தில் "இந்தியத் தலைவர்களுடன் சமரசம் பேச வேண்டும்" என்னும் கட்சி பலத்திருந்தது. அதன் காரணமாகத்தான் கிரிப்ஸ் தூது வந்தார். அந்தச் சந்தர்ப்பம் பல காரணங்களினால் கை நழுவிப் போய்விட்டது.

பிறகு, இங்கிலாந்தில் "சமரசம் கூடாது" என்ற கட்சி வரவர வலுவடைந்து இப்போது சர்வாதிகாரம் பெற்றிருக்கிறது. இதன் காரணம் என்னவோ ஸ்பஷ்டமாயிருக்கிறது.

கிரிப்ஸ் தூதுக்குப் பிறகு பிரிட்டிஷார் வட ஆப்பிரிக்காவில் பெரும் வெற்றியடைந்தார்கள். பொதுவாக, எல்லா யுத்த ரங்கங்களிலும் நேசக் கட்சியாரின் கை ஓங்கியிருக்கிறது.

வெற்றியினால் அகந்தை கொள்வது மனித இயற்கை; ஆங்கிலேயருக்கும் அது இருக்கத்தானே செய்யும்?

இன்னும், இந்தியாவில் 'பொது ஜன இயக்கம்' என்ற பெயரால் நடந்த காரியங்கள் அதி சீக்கிரத்தில் அடக்கப்பட்டு விட்டன. அதற்குப் பிறகு தேசத்தில் சாதாரண அரசியல் கிளர்ச்சி கூட இல்லாமல் போய் விட்டது.

"ஜெனரல் வேவல் நியமனத்தினால் இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை" என்று வெகு சிரமப்பட்டுச் சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதுகின்றன.

ஆனால் இராணுவ ஆட்சி அவசியமாகும்படி இங்கே என்ன நடக்கின்றது?

இருபது வருஷமாகச் சிறை சென்று கஷ்டப்படுவதே தொழிலாகக் கொண்ட தேசபக்தர்கள் சிலர் இப்போதும் சிறையில் கிடந்து கஷ்டப்படுகிறார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் தந்தம் காரியங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மகாத்மாவை விடத் தங்களைத் தீவிரமாகக் காட்டிக் கொண்டு அவரைத் தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்திய புண்ணியவான்கள் இந்த யுத்த காலத்தில் மளமளவென்று பணத்தைச் சம்பாதிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு ஏன் அகந்தை ஏற்படாது? "தேசிய சர்க்கார் வேண்டும்" என்னும் கோரிக்கையை அவர்கள் ஏன் புறக்கணிக்க மாட்டார்கள்? அதற்கு அறிகுறியாக ஜெனரல் வேவலை ஏன் வைஸராய் பதவிக்கு நியமிக்க மாட்டார்கள்?

* * *

பிரிட்டிஷாரின் வெற்றி அகந்தையையும், சாம்ராஜ்ய ஆசையையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும் நம்முடைய காரியம் கைகூடி விடாது; நமது தேசிய இலட்சியம் ஈடேறி விடாது.

அறுபது வருஷமாகக் காங்கிரஸ் மகா சபை சுயராஜ்யத்துக்காகப் பாடு பட்டு வருகிறது. இருபத்தைந்து வருஷமாகக் காந்தி மகாத்மாவின் தலைமையில் தேசிய இயக்கம் தீவிர மாக நடந்து வருகிறது.

இவ்வளவுக்கும் பிறகு இந்தியா ஏன் இந் நிலைமையில் இருக்கிறது? இந்தியாவின் தேசியக் கோரிக்கையை ஏன் பிரிட்டிஷ் மந்திரிகள் அலட்சியம் செய்ய முடிகிறது என்பதை அவ்வப் போது யோசிக்க வேண்டியது அவசியம். நம்மிடத்தில் — நமது தேசிய இயக்கத்தில் — உள்ள குறைகள் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்துச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

ஆம்; நம்முடைய தேசிய இயக்கத்தில் ஒரு முக்கியமான குறை இருந்திருக்கிறது.

தலைவர்களுடைய சக்தியையே பொது ஜனங்கள் அளவுக்கு அதிகமாக நம்பி யிருந்து விட்டார்கள். அவ்விதமே பொது ஜனங்களின் காரிய சக்தியிலும் தலைவர்கள் அதிக நம்பிக்கை வைத்து விட்டார்கள்.

காந்திஜியை மகாத்மா என்றும், ஜவஹர்லால்ஜியை ஒப்பற்ற தலைவர் என்றும், இராஜேந்திர பிரஸாத்தைத் தியாகமூர்த்தி யென்றும் நாம் போற்றுவது முறையானதுதான். ஆனால், அந்த மகாத்மாவும், ஒப்பற்ற தலைவரும், தியாக மூர்த்தியும் தங்களுடைய சொந்த சக்தியினாலேயே சுயராஜ்யம் கொண்டு வந்து விடுவார்கள் என்றும் நம்மில் பலர் எண்ணி யிருந்து விட்டோம். இதுதான் தவறு.

வேறு ஒன்றினாலும் காரியம் ஆகாவிட்டால், மகாத்மா காந்தி உபவாசம் இருந்தாவது காரியத்தைச் சாதித்து விடுவார் என்ற ஆசை நம்மில் பலருடைய உள்ளத்தில் குடிகொண்டு விட்டது.

இந்த மாதிரி ஆசையினாலும் நம்பிக்கையினாலும், பொது ஜனங்களாகிய நாம் நம்முடைய கடமையில் தவறி விட்டோம்.

அவ்விதமே, பொது ஜனங்களின் விஷயத்தில் தலைவர்களும் ஏமாந்து போயிருக்கிறார்கள்.

தங்களைத் தரிசிப்பதற்காகவும், தங்கள் பேச்சைக் கேட்பதற்காகவும் லட்சக் கணக்கில் ஜனங்கள் பொதுக் கூட்டங்களில் கூடுவதைப் பார்த்து விட்டு, இவ்வளவு பேரும் நாம் சொல்வதை உடனே காரியத்தில் நிறைவேற்றுவார்கள் என்று நமது தலைவர்கள் நம்பி விட்டார்கள்.

இந்த நம்பிக்கையின் காரணமாகத் தான் போன வருஷம் ஸ்ரீ வல்லபாய் படேல், "இந்த் தடவை இயக்கம் ஆரம்பித்தால் ஒரே வாரத்தில் முடிந்து விடும்!" என்றார். "வெற்றியுடன் முடியும்" என்ற கருத்திலேதான் அவர் சொன்னார். அந்த நம்பிக்கைக்கு நேர்மாறாகக் காரியம் முடிந்து விட்டது.

* * *

தலைவர்களுடைய தவறான நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கு இந்தியாவின் தேசியப் பத்திரிகைகள் உதவி செய்திருக்கின்றன. பொது ஜனங்களின் உண்மையான மனோபாவத்தையும், அவர்களுடைய சக்தியையும் சரியாக எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக, அவை காங்கிரஸ் தலைவர்களைக் காட்டிலும் தீவிரமாக எழுதி, பொது ஜனங்கள் தீயில் குதிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டன. இப்போதோ, தலைவர்கள் எல்லாரும் சிறையிலிருக்க, பத்திரிகைகள் காகிதக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, சர்க்கார் சட்டங்களுக்கு ஒடுங்கி, காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றன.

"மந்திரத்தினால் மாங்காய் விழும்" என்று பொதுஜனங்களில் சிலர் உண்மையாகவே நம்பினார்கள். அப்படி விழாது என்று தெரிந்திருந்தும் பத்திரிகைக்காரர்கள் சிலர் மோசடியாக "மந்திரத்தினால் மாங்காய் விழும்!" என்று எழுதி ஜனங்களை வஞ்சித்து விட்டார்கள்.

மேற்கூறிய தவறுகளை யெல்லாம் இனிமேலாவது நிவர்த்தி செய்ய வேண்டும்.

அதாவது, தலைவர்களுடைய சக்தியில் பொதுஜனங்கள் நம்பிக்கையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தலைவர்கள் எவ்வளவு மகான்களாயும் ஒப்பற்றவர்களாயும் தியாக மூர்த்திகளாயும் இருந்த போதிலும், பொது ஜனங்கள் ஒரு முகமாக அவர்களைப் பின்பற்றினாலன்றிக் காரியம் கை கூடாது என்பதை நாம் உணர வேண்டும்.

அவ்விதமே, பொது ஜனங்களின் சக்தி இவ்வளவுதான் என்பதைத் தலைவர்களும் உணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்.

காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பாலும் சிறையில் இருப்பதால், காங்கிரஸின் பெயரால் இப்போது ஒன்றும் செய்ய

அக்குப் போர்

● "கோடை உஷ்ணம் வரவர அதிகமாகிக் கொண்டு போகிறதே. இதைக் கட்டுப்படுத்த வழியில்லையா?" என்று ஒரு சகவாசி கேட்கிறார்.

உஸ், இரைந்து பேசாதேயும். சர்க்கார், உஷ்ணக் கட்டுப்பாடு 'கண்ட்ரோலர்' ஒருவரை நியமித்து விடப் போகிறார்கள்!

★

கிரி என்ற மரத்தின் இலை அகாலத்தில் உதிர்ந்தால் தோல்வி ஏற்படும் என்று ஜப்பானியர் நம்புகின்றனர். இந்த மூட நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு காகிதத்தினால் செய்த கிரி இலைகளை உதிர்த்துத்தான் அட்டு என்ற தீவை அமெரிக்கர் பிடித்துக் கொண்டனராம்.

அமெரிக்க ஸெனெட்டில் காகித கிரி இலை செய்ய ஒரு 5432100000000 டாலர் மசோதா கொண்டு வரப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

★

ஆஸ்திரேலியாவில் பிரதம மந்திரி கர்ட்டினுக்குச் சட்ட சபையில் ஒரே ஒரு அதிகப்படி வோட்டுதான் இருக்கிறதாம்.

எதிர்க் கட்சி அங்கத்தினர்களில் நாலு பேரை 'உள்ளே தள்ளும்' வித்தையை இவர் ஒரிஸ்ஸா பிரதம மந்திரியிடம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று யோசனை கூறுகிறேன்.

★

சென்னையில் சங்கீதப் பள்ளிக்கூடம் வைத்திருக்கும் ஆசிரியர் ஒருவர், தமது பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவிகள் மூன்றே மாதத்தில் ரேடியோவில் கச்சேரி செய்யலாம் என்று பெருமையடித்துக் கொள்கிறார்.

"மூன்று மாசம் வேண்டுமா?" என்று ரேடியோக்காரர்கள் சொல்லி ஆச்சரியப்படுவது காதில் விழுகிறது!

★

சில பத்திரிகைகள் காந்தி — இர்வின் சமரசம் மாதிரி, காந்தி — வேவல் சமரசம் ஏற்படக் கூடுமென்று ஜோசியஞ் சொல்லுகின்றன.

காரணம், இர்வின் ஒற்றைக் கை வீரராயிருந்தது போல், வேவல் ஒற்றைக் கண் வீரராக விளங்குவதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

★

இன்னொரு காரணமுமிருக்கிறது. சர்ச்சில் ஒரு சமயம் "நான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சிதைப்பதற்காக பிரதம மந்திரி பதவி ஏற்கவில்லை" என்று கூறினாரல்லவா? அதே சர்ச்சில் இப்பொழுது அபிஸீனியாவை இத்தாலிய ஏகாதிபத்தியத்தினின்றும் சிதைத்த ஜெனரல் வேவலை வைஸ்ராயாக நியமித்திருக்கிறார்! என்னே, சமரசம் ஏற்படுத்தும் நோக்கம் அவருக்கு அந்தரங்கமாக இருக்கலாம் என்று தெரியவில்லையா?

★

இந்தியாவுக்கு வந்து சென்ற அமெரிக்க பத்திரிகைக் கோஷ்டியார் இந்தியாவைப் பற்றிய உண்மையான நிலைமையை அமெரிக்க மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றனராம்.

சந்தேகம் என்ன? ஆட்டு என்ற பத்திரிகாசிரியர் "தென்னிந்தியர்கள் குள்ளமானவர்கள், அவர்கள் மூக்கு சப்பையாயும் நாசித் துவாரங்கள் வாணக் குழாய்போன்றும் இருக்கும்" என்று தமது 'உறான்' பத்திரிகையில் எழுதியதைப் படித்தபோது நமக்குக் கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகம் தீர்ந்து விட்டது!

"காசி"

முடியாமலிருக்கிறது. எனவே, வெளியிலுள்ள தலைவர்கள் ஒன்று கூடி, தாற்காலிகமாக ஒரு புதிய அரசியல் கட்சியை ஸ்தாபித்துக் கொள்ளலாமா என்று யோசிக்க வேண்டும். பொது ஜனங்களின் சக்தியைத் திரட்டி தேசியக் கோரிக்கையை வலியுறுத்தும் வழிகளைத் தேட வேண்டும்.

ஈசுவருடைய சித்தம் ஒன்று தனியாக இருக்கிறதென்பதை நாம் மறந்து விடவில்லை. பகவான் நினைத்தால் ஒரு நொடியில் பிரிட்டிஷ் மந்திரிகளின் அகந்தையை அடக்கி விடலாம்; இராணுவ வைஸ்ராய் வேவலைக் கொண்டே காங்கிரஸ் தலைவர்களைச் சமரசத்துக்கு அழைக்கும்படி செய்யலாம்; நாளைக்கே இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடைக்கும்படியும் செய்து விடலாம். ஆனால், பகவானுடைய சித்தம் இன்னதென்பதை நாம் அறியோம். மனித யத்தனத்தில், மனித அறிவைக் கொண்டு செய்ய வேண்டிய காரியத்தைத்தான் மேலே சொன்னோம்.

வட்ட மேஜை

● காரைக்குடி. சங்கீதப் பயிற்சியாளர் ஸ்ரீ சா. மூ. விசுவனாதன் செட்டியார் எழுதுவது :—

சமீபத்தில் (13-6-43 ல்) இப் பகுதியில் கீழச்சிவல் பட்டியில் திரு. ஜி. என். பால சுப்பிரமணியம் அவர்களின் சங்கீதக் கச்சேரி ஒரு விசேஷக்காரர் இல்லத்தில் நடந்திருக்கிறது. அதில் ஜி. என். பி. அவர்கள் முதலில் தெலுங்கு கீர்த்தனம் பாடியிருக்கிறார். இரண்டாவது மூன்றாவதும் தெலுங்குக் கீர்த்தனைகள் பாடியிருக்கிறார். அங்குள்ள சிலர் "தமிழ் தமிழ்" என்றனராம். ஜி. என். பி. க்கு அன்று சாரீரமும் இடக்கு செய்து. பாடவும் முடியாததினால் உடனே தம்மால் கச்சேரி செய்ய இயலாது என்று கச்சேரியை நிறுத்தி விட்டாராம். இதைக் காரைக்குடி "குமரன்" பத்திரிகை "தமிழ் பாடுவதற்குச் சாரீரம் கெட்டு விட்டது. தெலுங்குக்கு நன்றாக இருக்கிறது. மீதித் தமிழ் பாடச் சொன்னதற்கு ஜி. என். பி. ஓடி விட்டார்!" என்று பிரசுரித்திருக்கிறது. குற்றம் சாட்டுவதென்றால் ஒரு மனிதனை எடுத்ததிற்கெல்லாம் குற்றம் சொல்லலாம். வேண்டாப் பெண்டாட்டி கால் பட்டாலும் குற்றம் கை பட்டாலும் குற்றம். அன்றைய தினம் ஜி. என். பி. செய்தது ஒன்றும் தவறல்ல. காக்கை உட்காரவும் பனம் பழம் விழவும் காலம் சரியாக இருந்ததுபோல், "தமிழ், தமிழ்" என்ற கூக்குரல் கிளம்பவும் ஜி. என். பி. சாரீரம் கெடவும் சரியாக இருந்ததினால், "தமிழ் கேட்டதற்காகக் கச்சேரி செய்யவில்லை" என்கின்றனர்.

ஜி. என். பி. இரண்டு வாரம் முன்பு தேவகோட்டை கச்சேரியில் நாலு கீர்த்தனங்களுக்குப் பின் பூராவும் தமிழ் பாடியிருக்கிறார். தமிழ்ப் பாட்டுக்கள் கச்சேரியில் பெரும்பாலாகவும் கீர்த்தனங்களாகவும் இருக்க வேண்டுமே தவிர, முதல் முதலிலிருந்து தமிழைத் தவிர வேறு பாஷையில் எதுவும் பாடக் கூடாது என்று நிபந்தனை போட்டால் சம்மதப்பட்ட வித்வான்கள்தான் அப்படிப் பாடுவார்கள். எல்லோரும் அதற்கு ஒரு மாதிரி இசைவார்களா? ஜி. என். பி. க்கு அடிக்கடி சாரீரக் கேடு உண்டு என்பது அநேகருக்குத் தெரியும். தமிழைப் பாடச் சொன்னதால் சாரீரம் கெடவும் இல்லை; சாரீரம் கெட்டதினால் தமிழ் பாடாமல் அவர் தெலுங்கைப் பாடியதுமில்லை. ஏதோ அன்றையக் கச்சேரி அவ்வளவுதான்.

இதற்காக வித்வான்களின் உரிமைகளைப் பறித்து, அதைப் பாடு இதைப் பாடு என்று கட்டளைகள் இட்டு, கச்சேரியைக் கெடுப்பது ரசிகர்களுக்கு அவ்வளவு அழகல்ல. பாடும் வித்வான்கள் காலப் போக்கையும் சபை நோக்கத்தையும் அனுசரித்துத் தங்கள் மனோதர்மப்படி ஏகபோகமாகக் கச்சேரி செய்வதுதான் எப்பொழுதும் உள்ள வழக்கம். அவ்வழக்கம் நமது ஜி. என். பி. இடம் உண்டு என்பது நான் குறிப்பிடாமலே பெரும்பாலோர்க்குத் தெரியும்.

[சங்கீத வித்வான்களிடம் சபையோர் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வது இப்போதெல்லாம் சகஜமாகி யிருக்கிறது. எனவே, தமிழ் இசை அன்பர்கள் தமிழ்ப் பாட்டுப் பாடவேண்டு மென்று கேட்டுக் கொள்வதில் யாதொரு தவறும் இல்லை. ஜி. என். பி. அந்தக் காரணத்திற்காகக் கச்சேரியை நிறுத்தி யிருப்பார் என்றும் நாம் எண்ணவில்லை. ரஸிகர்களும் வித்வான்களின் சிரமங்களை உணர்ந்து அநுதாபத்துடனும் மரியாதையுடனும் அவர்களை நடத்த வேண்டும். மேற்படி கச்சேரி நடுவில் நின்று போனது பற்றி நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்.]

● திருச்சி
21—6—43

நான் தங்களுடைய முதல் இதழிலிருந்து இதுவரை படித்துவரும் அநேகரில் ஒருவன். தங்கள் இதழ்களைப் படித்ததில் எனக்கு வெகு நாளாக ஒரு சந்தேகம் உதித்துக் கொண்டிருக்கிறது. அதைத் தாங்கள் நிவர்த்தி செய்வீர்கள் என்று எண்ணுகிறேன். பொதுவாகத் தாங்கள் ராஜாஜி சொல்லுவது தான் தற்கால தேச நிலைமைக்கு உகந்தது என்று தங்கள் இதழ்களில் எழுதி வருகிறீர்கள். அவையாவன:—

(1) மந்திரி சபையைக் காங்கிரஸ் விட்டு விட்டது பிசகு.

(2) கிரிப்ஸ் திட்டத்தை ஒப்புக் கொள்ளாமல் விட்டது பிசகு.

(3) பாகிஸ்தானைக் கொடுத்தாவது ஜின்னாவுடன் சமரசம் செய்து கொள்ளாதது பிசகு.

ஆகிய மூன்று விஷயங்களைத் தங்கள் இதழ்களில் அடிக்கடி எழுதுகிறீர்கள். மேற்கூறிய விஷயங்களில் ராஜாஜி சொன்னதுதான் சரி. மற்றத் தலைவர்களாகிய காந்திஜி, ஜவாஹர்லால்ஜி, மற்றும் பல மேன்மை தங்கிய தலைவர்கள் இந்த விஷயங்களில் கொண்டிருந்த அபிப்பிராயம் தப்பு என்று பொருள்பட எழுதுகிறீர்கள். பல தலைவர்கள் சொல்வது தப்பு என்றும், ராஜாஜி ஒருவர் மட்டும் சொல்லுவது தான் சரி என்றும் எப்படி நம்புவது?

எஸ். ஏ. வேங்கட சுப்ரமணியம்.

[மகாத்மாவும் மகாபுத்திமானுமான தர்ம புத்திரர் கௌரவர் சபையில் சகுனி மாமாவுடன் சூதாடினார். அதைப் பீஷ்மர், துரோணர் முதல் அர்ச்சுனன், பீமன் வரையில் எல்லாரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். விகர்ணன் ஒருவன்தான் எழுந்திருந்து "இது தவறான காரியம்; வேண்டாம், நிறுத்துங்கள்!" என்றான். இதிலிருந்து, "விகர்ணன் ஒருவன்தானே சொன்னான்? மற்ற மகான்களும் மேதாவிகளும் சும்மாத் தானே இருந்தார்கள்? ஆகையால், சூதாட்டம் பிசகில்லை; நியாயமானதுதான்!" என்று வாதிக்கலாமா? அதுபோலவே, ராஜாஜி ஒருவரா யிருந்த போதிலும் அவர் சொல்லியது தான் சரியான வழி, அதைக் கைக் கொள்ளாததால் தேசம் பெரு நஷ்ட மடைந்திருக்கிறது என்று நாம் கருதுகிறோம். ஆனால், இதற்காக நாம் மற்றத் தலைவர்கள் மீது குற்றம் சொல்லவில்லை; விதியின் மேலே தான் குற்றம் சுமத்துகிறோம். —ஆசிரியர்.]



ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக் கழகத்தின் ஆண்டு விழா சென்ற ஜூன் மீ 14உ. "கல்கி" ஆசிரியரின் தலைமையில் நடைபெற்றது. செட்டிமார் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தமிழன்பர்களும் கலை அன்பர்களும் வந்திருந்தார்கள். "குமரன்" ஆசிரியர் ஸ்ரீ சொ. முருகப்பா அவர்கள், ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். "பாரதி தாஸன்" அவர்களும், தமிழ் ஆசிரியர் ஸ்ரீ திருநாவுக்கரசு அவர்களும் உபந்நியாசம் செய்தார்கள். விவேகானந்தர் கல்விக் கழகத்தின் மாணவர்களும், மாணவிகளும் பல அரிய நிகழ்ச்சிகளை இடையிடையே நடத்திக் காட்டினார்கள். அவற்றுள் தமிழிசையின் பெருமையைக் காட்டும் நிகழ்ச்சி பெரிதும் பாராட்டப் பெற்றது. தமிழ்த் தாயின் முடிசூட்டு வைபவத்துடன் விழா முடிவுற்றது. மேற்படி கழகத்தை ஸ்தாபித்து மிகச் சிறந்த முறையில் நடத்தி வரும் ஸ்ரீ பழனியப்பச் செட்டியார் வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும் தமது இல்லத்தில் விருந்து அளித்தார்.

கேட்டுப் பாருங்கள்

ஜூலை 1உ. சென்னை பாலமுரளி கிருஷ்ணா என்னும் இளம் ஆந்திர வித்வானின் பாட்டு.

திருச்சியில் அன்று முதிர்ந்த தமிழ் வித்வான் முடிகொண்டான் வெங்கட்ராமய்யர் கச்சேரி.

2உ. திருச்சியில் ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமண்யம் என்னும் இளம் வித்வான் பாடுகிறார்.



[ஏ. எஸ். பஞ்சாபகேசன்]

3உ. சென்னையில் அரியக்குடி ராமானுஜய்யங்கார் ஒன்றரை மணி நேரம் சக்கைப் போடு போடுகிறார்.

4உ. சென்னையில் ஆர். ராஜகோபாலன் பாட்டும், ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன் வயலினும் கேட்கத் தகுந்தவை.

திருச்சியில் பந்தணைநல்லூர் ராஜாயியின் பாட்டும், தேவகோட்டை நாராயணய்யங்கார் வீணையும் கேட்பதற்குரியவை.

5உ. திருச்சியில் விளாத்திகுளம் நல்லப்பசாமி பாண்டியன் தமிழிசையும், பல்லடம் சஞ்சீவிராயர் குழலிசையும்.

6உ. சென்னையில் ஸ்ரீ பி. எஸ். வேநாராளத்தின் முழுநேரக் கச்சேரி நடைபெறுகிறது.

8உ. திருச்சியில் சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை பாடுகிறார். இந்தத் தடவை சித்தூர் முழுத்தமிழ்க் கச்சேரியாகச் செய்தால் ஒரு நல்ல உதாரணமாயிருக்கும்.


9உ. சென்னையில் ஏ. எஸ். பஞ்சாபகேசன், டி. கே. ஜயராமன் ஆகிய இரு இளம் பாடகர்கள் பாடுகிறார்கள். இரண்டும் ஒவ்வொரு விதத்தில் நன்றாயிருக்கும்.



[ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன்]

திருச்சியில் ஸ்ரீ ஜி. சாரங்கபாணி செட்டியாரின் தமிழ் இசையுடன், டி. ஜி. சங்கரகோபாலனின் குழலிசையும் சேர்கிறது. டி. என். ஆர். நடராஜ சுந்தரம் நாதஸ்வர இசை வேறு இருக்கிறது.

10உ. சென்னையில் திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளையின் புல்லாங்குழல் கச்சேரி.



சூரியனை நோக்கி . . .

தினசரி அருணோதயத்தில் ஏராளமான விமானங்கள் இந்திய விமான நிலையங்களிலிருந்து கிளம்பி கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஏன் தெரியுமா? ஜப்பானியரின் "உதய சூரிய"க் கொடி இந்தியாவில் நாட்டப்படாமலிருப்பதற்காகத்தான். நமது தினசரி உபயோகத்திற்காக நாம் வாங்கும் பல்வேறு சாமான்களும்கூட விமான உற்பத்திக்கும், விமானிகளின் பயிற்சிக்கும் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே இச் சாமான்களை நாம் குறைத்து வாங்க வாங்க நமது பாதுகாப்பாளர்களான நமது படைகளுக்கு அவை அதிகமாகக் கிடைக்கும். இதே மாதிரி நமது செலவுகளைக் குறைக்கக் குறைக்க தேசத்திற்குக் கடன் கொடுத்துதவுவதற்கு அதிகப்பணம் மீதப்படும்.

நாம் வேலை செய்கையிலும்சரி, உறங்குகையிலும்சரி, நமது வீரவிமானிகள் அல்லும் பகலும் ஆகாசத்திலிருந்து காவல் புரிந்துகொண்டிருக்கின்றனர். அதுபோல் நாமும் நமது பங்குக்கு ஓரளவுயுத்தசேவைபுரியவேண்டாமா? அதற்கு நமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, அதனால் மீதப்படும் பணத்தை தேசத்திற்கு கடன் கொடுத்து உதவுவோமாக.

டிபென்ஸ் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்

...அல்லது டிபென்ஸ் லோன்களைத் தவிர

வேறெதையும் வாங்குமுன்—சற்றே யோசியுங்கள்

★ ஸர்ட்டிபிகேட்டுகள் உங்கள் தபாலாபீஸில் கிடைக்கும் ரூ. 10-க்கு பத்துவருடத்தில் 3-8-0 லாபம் கிடைக்கிறது.

CPU-28-TM

எத்தனை அடி வேண்டும்?

"தமிழ் மகன்"

தமிழ் மக்களுக்கு எத்தனை அடி வேண்டும்? பதினோராயிரம் அடி போதுமா? அல்லது பதினாலாயிரம் அடி கொடுத்துத்தான் ஆகவேண்டுமா? — இந்தப் பிரமாதமான பிரச்னை இப்போது கிளம்பியிருக்கிறது.

இந்திய சர்க்கார் "பதினோராயிரம் அடி போதும்!" என்கிறார்கள்.

"போதாது; தமிழ் மக்கள் மட்டமான ஜனங்கள்; அவர்களுக்குப் பதினாலாயிரம் அடி கொடுத்தால் தான் சரிப்பட்டு வரும்!" என்று ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் சொல்லுகிறார்.

ஒரு தமிழ் டாக்கியானது பதினாலாயிரம் அடி நீளமாவது இருந்தால்தான் தமிழ்நாட்டு ஸினிமாத் தொழில் உருப்பட்டுக் கரையேறுமாம்! இல்லாவிட்டால் குட்டிச்சுவராய்ப் போய்விடுமாம்! ஆகையால், உடனே இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமாம்!

"காந்தி மகான் சிறையில் இருக்கிறாரா? இருந்துவிட்டுப் போகட்டும். ஜனங்களை உணவுப் பஞ்சம் பிடித்திருக்கிறதா? நன்றாய்ப் பிடிக்கட்டும். அதற்கெல்லாம் இப்போது ஒரு அவசரமும் இல்லை. இந்த ஸினிமா அடிப் பிரச்னைதான் இப்போது பெரிய பிரச்னை. பெருங்கிளர்ச்சி செய்து இன்னும் 3000 அடி வாங்க வேண்டும். இல்லாவிட்டால் வந்தது ஆபத்து! எல்லாரும் கிளம்புங்கள்!" என்று கூவி அழைக்கிறார் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன். இந்தப் பிரச்னையின் தலைபோகிற முக்கியத்தை வெளிப்படுத்துவதற்காக டீ பார்ட்டி வைத்துப் பிரசங்கம் செய்து, அப்படியும் விஷயம் விளங்காதவர்களுக்குக் கருப்புப் பலகையில் கோடு போட்டும் காட்டியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் பல வருஷ காலமாக ஸினிமா சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர்கள் எல்லாரும் ஒரு முகமாக, "தமிழ்ப் படங்களின் நீளம் குறைய வேண்டும்" என்று சொல்லி வந்திருக்கிறார்கள். அப்படிக் குறைப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கும்போது, தென்னிந்திய ஸினிமா வர்த்தக சங்கத்தின் தலைவர் "இன்னும் 3000 அடி அதிகம் வேண்டும்" என்று கேட்பது பெரிய ஆச்சரியம்.

அதைவிட ஆச்சரியமானது அதற்கு அவர் சொல்லும் காரணம்!

"தமிழ்ப் படங்களை மட்டமாக எடுத்தாக வேண்டியிருக்கிறது. ஆகையினால் 11,000 அடி போதாது; 14,000 அடி வேண்டும்" என்று ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் சொல்கிறார்!

ஏனெனில், தமிழ்ப் படங்களை மட்டமான ஜனங்கள்தான் அதிகம் பார்க்கிறார்களாம். அவர்களுக்காக மட்டமான பகுதிகளைச் சேர்க்க 3000 அடியாவது அதிகம் வேண்டுமாம்!

பம்பாய்க்காரர்கள் 11,000 அடி படம் எடுக்கலாமாம். உயர்தரப் படமாகவே எடுக்கலாமாம். எடுத்து வெற்றியடையலாமாம். ஏனென்றால், வடநாட்டில் ஹிந்திப் படங்களைப் பார்க்கப் படித்தவர்களாகவே நாலு கோடி பேர் இருக்கிறார்களாம். ஆனால் தமிழ்நாட்டில் மொத்த ஜனத் தொகையே கொஞ்சந்தானாம். இவர்களில் படித்தவர்கள் ரொம்பக் கொஞ்சமாம். ஆகையால், மட்டமான தமிழர்களுக்காக மட்டமான பகுதிகளைப் புகுத்த வேண்டியிருக்கிறதாம். ஆகையால், கட்டாயம் 14,000 அடி வேண்டுமாம்! — இதுதான் சென்ற 19உ ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அளித்த டீ பார்ட்டியில் அவர் பேசியதின் சாராம்சம்.

* * *

தமிழ் மக்களைப் பற்றி ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் எவ்வளவு மட்டமான கொள்கை உடையவர் என்பது ஏற்கெனவே நன்கு வெளியாகியிருக்கிறது. தமிழ்நாட்டின் மட்டமான ஜனங்களுக்கு "மதனகாமராஜன்" "மங்கம்மா சபதம்" போன்ற மட்டமான ஆபாசக் குப்பைக் கதைகள்தான் லாயக்கு என்பதை உணர்ந்து அந்தக் கதைகளைப் படம் பிடித்திருக்கிறார்!

சமீபத்தில், தமிழிசை இயக்கத்தைப் பற்றி அவர் ஒரு அருமையான கருத்தை வெளியிட்டார். தமிழ்ப்பாட்டு வேண்டுமா, வேண்டாமா என்னும் பிரச்னையை அவருடைய "பால நாகம்மா" படம் தீர்த்து வைத்துவிட்டதாம்!

"சில பேர் தமிழ்ப் பாட்டுப் பாட வேண்டும் என்கிறார்களே? எப்பேர்ப்பட்ட பிசகு? பாருங்கள்; 'பாலநாகம்மா' தெலுங்குப் படத்தை நான் எடுத்தேன். — நான்தான் எடுத்தேன். அது தமிழ்நாட்டில் எவ்வளவு

நன்றாய் ஓடிற்று? ஆகையால், கலைக்குப் பாஷை முக்கிய மில்லை. எந்த பாஷையா யிருந்தாலும் ஒன்றுதான்!" என்றார்.

தமிழ் மக்களைப் பற்றி ரொம்பவும் மட்ட மான அபிப்பிராயம் ஸ்ரீ எஸ். எஸ். வாஸ னுக்கு இல்லாமலிருந்தால், இவ்வளவு மட்ட மான வாதத்தைச் சொல்லி யிருக்க மாட்டார்.

சரி; பாலநாகம்மாதான் நன்றாய்த் தமிழ் நாட்டில் ஓடுகிறதே! எதற்காகத் தமிழிலே படம் எடுக்க வேண்டும்? ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் எடுக்கும் படத்தை யெல்லாம் தெலுங்கிலேயே எடுப்பதுதானே? குறைந்த பட்சம், அவர் எடுக்கும் தமிழ் டாக்கிகளில் பாடும் பாட்டுக்களை யெல்லாம் தெலுங்கி லேயே பாடச் செய்வதுதானே?

இன்னும், தமிழ்நாட்டில் "பக்த நந்தனா" ரைக் காட்டிலும் "பாலநாகம்மா" நன்றாய் ஓடி, இரண்டு பங்கு அதிக பணம் கொடுத்த தாக வைத்துக் கொள்வோம்.

இதிலிருந்து, தமிழ் மக்களுக்குத் தமி ழைக் காட்டிலும் தெலுங்கின் மேல் இரண்டு பங்கு அபிமானம் அதிகம் என்று முடிவு கட்டி விடலாமல்லவா?

ஆகவே, "பக்த நந்தனா"ரைத் தெலுங் கிலே எடுத்திருந்தால் தமிழ் மக்கள் இரண்டு பங்கு நன்றாய்ப் பார்த்திருப்பார்களே!

"பால' நாகம்மாவும் கலை; கர்நாடக சங்கீதமும் கலை; அதற்கு ஆனதுதான் இதற்கும்!" என்று சொல்லக்கூடியவர், தமிழ் மக்களை மட்டமானவர்களாய்க் கருதுவதில் வியப்பில்லைதான்!

உண்மையில், தமிழ் நாட்டில் "பால நாகம்மா" ஓடியதற்கும், தமிழர்களுடைய தமிழ் இசை ஆர்வத்துக்கும் யாதொரு சம்பந் தமும் கிடையாது.

டாக்கி பார்க்கும் வழக்கமுடையவர்கள் "கன்றுவியில் எந்தக் கன்றுவியா யிருந்தா லென்ன?" என்ற முறையிலே பெரும்பாலும் டாக்கிக்குப் போகிறார்கள். (சில சமயம் படம் நன்றா யிருந்துவிட்டால் சந்தோஷப் படுகிறார்கள்.) அந்த முறையிலேதான் தமிழ் மக்கள் "பால நாகம்மா"வையும் பார்த்திருக் கிறார்கள்.

இதிலிருந்து, "தமிழ் மக்கள் தமிழ்ப் பாட்டை விரும்பவில்லை" என்று முடிவு கட்டுவது, தமிழ் மக்களை ரொம்பவும் மட்ட மாக நினைப்பவர்களாலும், தாய் மொழியைத் துவேஷிக்கும் இயற்கைக்கு விரோதமான ஜன்மங்களாலும்தான் முடிகிற காரியம்.

ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் பேச்சிலிருந்து பார்த்தால், பம்பாய்க்காரர்கள் ஒரு விஷயத் தில் ரொம்பவும் தெரியாத அப்பாவிகள் என்று தோன்றுகிறது. நாலு கோடி பேருக்குப் படம் எடுப்பதைவிட இருபது கோடி பேருக்குப் படம் எடுத்தால் ஐந்து மடங்கு அதிக வருமானம் என்னும் சின்னக் கணக்கு அவர்களுக்குத் தெரியவில்லையோ, அல்லது தெரிந்தும் ஐந்தில் ஒரு பங்கு பணம் போதும் என்று எடுக்கிறார்களோ தெரிய வில்லை! இருந்தாலும், அவர்கள் அசட்டுத் தனமாக அலட்சியம் செய்திருக்கும் காரி யத்தை ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் உடனே செய்யத் தொடங்கலாம் என்று தோன்று கிறது. ஹிந்தி பட முதலாளிகள், படித்த நாலு கோடி பேருக்கே படம் எடுத்துக் கொண்டிருக்கட்டும்; தமிழ்ப் பட முதலாளி கள் பாக்கி 16 கோடி பேருக்கு மட்டமான படங்களையே எடுக்கட்டுமே! அதிலும் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அபிப்பிராயப்படி "பாஷை முக்கியமே யில்லை" என்றுதான் பால நாகம்மா என்றென்றைக்கும் நிரூபித்து விட்டதே! எனவே, பாலநாகம்மா, மதன காமராஜன் போன்ற படங்களை ஹிந்தி மட்ட ஜனங்களுக்காக ஏன் அனுப்பி வைத்து வெற்றி பெறக்கூடாது? எப்படியாவது வடநாட்டுப் பணத்தைச் சென்னைக்கு ஏன் கொண்டுவரக் கூடாது?

* * *

உண்மை என்னவென்றால், வடநாட் டைக் காட்டிலும் தென்னாட்டிலே ரஸிகர்கள் அதிகம். வடநாட்டில் படித்தவர்களுக்கு எவ்வளவு ரஸிகத் தன்மை உண்டோ அவ் வளவு தென்னாட்டில் படிக்காதவர்களுக்கே உண்டு. இதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். வடநாட்டில் சங்கீதக் கச்சேரி என்பது சாதாரணமாய் ரொம்பவும் அற்ப மான விஷயம். எவ்வளவு பிரபல வித்வான் கச்சேரிக்கும் ஐம்பது அல்லது நூறு பேர்தான் சபையில் சேர்வார்கள். தென்னாட்டிலோ இக்காலத்திலும் கர்நாடக சங்கீதக் கச்சேரி கேட்பதற்குப் பதினாயிரக்கணக்கில் ஜனங்கள் கூடுகிறார்கள்; கேட்கிறார்கள்; ஆனந்திக் கிறார்கள். எனவே, உயர்ந்த படங்களைக் கொண்டுவந்து தேசத்துக்கே வழி காட்டுவ தற்கு நமது செந்தமிழ் நாட்டைப்போல் சிறந்த நாடு வேறு கிடையாது. பட முதலாளிகள் சிலர் தங்களுடைய மட்டத் தன்மையைத் தமிழ் மக்களின் மேலே ஏற்றுகிறார்கள். ஏற்றி, "தமிழ் மக்கள் மட்டப் படத்தை விரும்பு கிறார்கள்" என்று பழி சுமத்துகிறார்கள்.

நல்ல தமிழ்ப் படத்துக்கு எப்போதும் தமிழ் மக்கள் நல்ல ஆதரவு கொடுத்துத்தான் வந்திருக்கிறார்கள். படித்தவர்கள் மட்டு மல்லாமல், 'பாமரர்'களும் சிறந்த ரஸிகத் தன்மையுடன் நல்ல தமிழ்ப் படங்களை ஆதரித்திருக்கிறார்கள். அவர்கள் மேல் "மட்டமானவர்கள்" என்ற பழியைச் சுமத்துவது பெரும் பாவம்; நன்றி கெட்ட தன்மை.

* * *

தமிழ்ப் படங்கள் 11,000 அடிக்குள் வருவதால் தீமை கிடையாது, ரொம்ப நன்மை உண்டு என்பது என்னுடைய கட்சி.

ஜூன் 1-ந் தேதி "கல்கி"யில் "ஆடல் பாடல்" பகுதியில் இது சம்பந்தமாக எழுதி யிருப்பதை யாரும் மறக்க முடியாது. நல்ல காற்றோட்ட மில்லாக் கொட்டகைகளில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஜனங்கள் அடைந்து கிடப்பது ரொம்பவும் சுகாதாரக் கேடு; கண்ணுக்குந் தீமை விளைப்பது.

அதே ஜூன் மீ 1உ வெளியான "ஹிந்து" பத்திரிகையில் 11,000 அடி போதும் என்ற கட்சியை ஆதரித்துத் தலையங் கத்தில் எழுதி யிருந்தது.

"......... இந்த சர்க்கார் உத்தரவு சினிமாத் தொழிலுக்கு பேருதவி செய்யு மென்று நம்புகிறோம். ஏனென்றால், இந்தியப் படங்கள் அதிக நீளமாக இருப்பது, சினிமாக் களின் வளர்ச்சியையே தடை செய்கிறது. நீண்டுகொண்டே போகும் சம்பாஷணை களும் பாட்டுக்களும் அலுப்பை உண்டாக்கு கின்றன. இதனால், சினிமாவில் நாம் முக்கிய மாக எதிர்பார்க்கும் 'டெம்போ' நாசமாய்ப் போகிறது. அமெரிக்கர்கள் 7000 அல்லது 8000 அடிக்குள் நன்றாக ரஸிக்கக்கூடிய உயர்தரப் படங்களைப் பிடிக்கிறார்கள் என்ப தைக் குறிப்பிட விரும்புகிறோம்" என்றும்,

"குறைந்த நீளப் படங்களினால் மற்றொரு அனுகூலமும் உண்டு. மற்ற நாடுகளைப்போல் இங்கேயும், முக்கிய புரோகிராமுடன் செய்திப் படம், கார்ட்டூன் படம், கல்விப் படம் போன்ற சில்லறை அம்சங்களையும் காண்பிப் பதும் சாத்யமாகும். மேற்சொன்ன சில்லறைப் படங்கள் தயாரிப்பதால் இந்திய சினிமா படத் தொழில் மேலும் விஸ்தரிக்க வழி ஏற்படும்" என்றும் [illegible] ஜூன் மீ 1உ "ஹிந்து" தலையங்கத்தில் எழுதி யிருந்தது.

ஆனால், ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுடைய டீ பார்டிக்குப் பிறகு "ஹிந்து" தன் அபிப் பிராயத்தை மாற்றிக்கொண்டு 14,000 அடிக் கோரிக்கையை ஆதரித்திருக்கிறது.

ஆனால் என் வரையில், ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுடைய பேச்சினால், பதினோராயிரம் அடி போதும் என்ற அபிப்பிராயந்தான் உறுதிப் பட்டிருக்கிறது. படத்தை மட்ட மாக எடுப்பதற்காகவே இன்னும் 3,000 அடி வேண்டுமென்று கேட்பது மகா அவ மானம் என்றே தோன்றுகிறது.

"பதினோராயிரம் அடியில் உயர்தரப் படம் எடுக்க மாட்டோம். மட்டப் பகுதிக்காக 3,000 அடி அதிகம் கிடைத்தால்தான் படம் எடுப்போம்; இல்லாவிட்டால், கடையைக் கட்டிவிடுவோம்" என்று தமிழ்ப் பட முத லாளிகள் சொல்லும் பட்சத்தில், தாராளமாய்க் கடையைக் கட்டிவிட்டுப் போகட்டும். 11,000 அடியில் வரும் உயர்தர ஹிந்திப் படங்களையே தமிழ் மக்கள் பார்த்துக் கொள்கிறார்கள்! "பாலநாகம்மா"தான் பாஷைப் பிரச்னை யைத் தீர்த்து வைத்துவிட்டதே! படம் தமிழா யிருந்தாலென்ன, தெலுங்கா யிருந்தா லென்ன, தேசிய பாஷையான ஹிந்தியாயிருந் தால்தான் என்ன!

ஒரு வேளை மேன்மை தங்கிய இந்திய சர்க்காரே தமிழ்ப் பட முதலாளிகளின் வேண்டுகோளுக்கு இரங்கி, தமிழ் டாக்கிகளில் மட்டப் பகுதி சேர்ப்பதற்காகவென்றே 3,000 அடி அதிகம் கொடுத்துவிட்டால், ரொம்ப சரி, 14,000 அடி படம் எடுங்கள்! 24,000 அடி வேணுமானாலும் கேட்டு வாங்கிக் கொண்டு மட்டத் தமிழ்ப் படம் எடுங்கள்! ஆனால் அது உங்களுடைய மட்டத்தன்மைக்கே அறிகுறியா யிருக்கட்டும். "தமிழ் மக்கள் மட்டமானவர்கள்; அவர்கள் மட்டப் படத் தைக் கேட்கிறார்கள்!" என்ற அபவாதத்தை மட்டும் சொல்ல வேண்டாம்!

தப்பு யார்மேல்?



ராமு (கிட்டுவைக் கிள்ளிக்கொண்டே) :— ஏன்டா நீ கணக்கைத் தப்பாகப் போட்டாய்? உன்னைப் பார்த்துக் காப்பி அடித்ததினால் எனக்கும் அடி விழுந்ததே!

பூந்தோட்டம்

ஆசிரியர்
ரவீந்திரநாத் டாகுர்
மொழிபெயர்ப்பு
த.நா.குமாரஸ்வாமி

பன்னிரண்டாம் அத்தியாயம்
முத்து மாலை

ஆயாவைப் பிடித்துக்கொண்டு நீரஜா பூஜை அறைக்குச் சென்றதுமே ஆதித்தியன் அறையிலுள் வந்து பார்த்தான்.


"நீரு எங்கே? எங்கே போய்விட்டாள்?" என்று வினவினான்.

"இதோ வந்து விடுவாள். பூஜை அறையில் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள்."

"பூஜை அறைக்கா? அது கிட்ட இல்லையே! அவ்வளவு தூரம் அவளால் நடந்து செல்ல முடியாதே? டாக்டர் படுக்கையி லிருந்து நகரவே கூடாதென்று உத்தரவிட் டிருக்கிறாரே!"

"அண்ணா! டாக்டர்கள் கொடுக்கும் மருந்தில் இருப்பதைவிட அவள் இவ்வாறு செய்வதில் எவ்வளவோ குணமிருக்கிறது. தன் கையாலேயே புஷ்பங்களைப் போட்டு வணங்கியதும் திரும்பி விடுவாள்" என்றான் ரமேன்.

நீரஜாவுக்குக் கடிதம் எழுதி அனுப்பிய போது, தன் வாழ்க்கையின் திரையில் மறைமுகமான மசியில் விதிபுருஷன் எழுதிய லிபி, வெளி உஷ்ணம் பட்டுத் திடீரென இவ்வாறுபிரகாசமாகத் தோன்றுமென ஆதித்தியன் தெரிந்து கொள்ள வில்லை. முதலில் அவன் ஸரளாவிடம் போன போது, 'வேறு வழியில்லை; நாம் பிரிய வேண்டியதுதான்' என்று அவளிடம் முடிவாகச் சொல்லிவிட வந்தான். ஆனால் அதைக் கூறுவதற்குப் பதிலாக அதற்கு நேர்மாறானதைக் கூறி விட்டான். வெண்ணிலாவில் படித்துறையில் கிடந்த வண்ணம் அவன் தனக்குள்ளேயே, 'வாழ்வின் சத்தியத்தைக் கால தாமதமாகவே கண்டு பிடித்தேன். அதனாலேயே என்னால் அதை உதறித் தள்ள முடியாமல் இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டான். பிரமாதமான தவறு செய்து விடவில்லை. அவமானப்படுவதற்கு இதில் என்ன இருக்கிறது? உண்மையை மறைப்பது தான் அநீதமாகும். எதையும் ஒளிக்கக் கூடாது; துணிந்துவிட வேண்டியதே; இதனால் விளைவது எதுவாயினும் சரி! தன் வாழ்வின் மையத்திலிருந்தும் தன் காரியத் துறையி லிருந்தும் ஸரளாவை ஒதுக்கி விடுவதினால், தான் ஏகாங்கியாய் நிற்க வேண்டியதுதான். உலகமே சுவையற்றதாகி விடும். அப்புறம் இவ்வளவு நாள் சிரமப்பட்டு முன்னுக்குக் கொண்டுவந்த தோட்ட வேலை அடியோடு நின்று போகும்.



"ரமேன், உனக்கு எங்களுடைய விஷயமெல்லாம் தெரியுமென்று எண்ணுகிறேன்."

"தெரியும்."

"இன்று இதற்கு ஒரு முடிவு கட்டி விடுகிறேன். திரை மறைவி லிருப்பதை வெளிப்படையாக்கி விடுகிறேன்."

"இதில் நீ ஒருவன் மட்டும் இல்லையே? சமையை உதறி எறிந்துவிடுவதோடு தொல்லை யாவும் நீங்கிவிடுமென்று எண்ண வேண்டாம். மன்னி ஒருத்தி இருக்கிறாள். அதை மறந்து விடாதே. சம்ஸாரத்தின் முடிச்சு மிகவும் சிக்கலானது."

"உன் மன்னிக்கும் எனக்கும் இடையே இந்தப் பொய் பித்தலாட்டம் எத்தனை நாள் நடந்து கொண்டிருப்பது? வாலிபத்திலிருந்து எனக்கும் ஸரளாவுக்கும் இருந்து வரும் உறவு உனக்குத்தான் தெரியுமே. அதைக் குற்றமெனக் கண்டிக்க முடியுமா உன்னால்?"

"எப்படி முடியும்?"

"இயற்கையான அந்த உறவின் கீழ் ஆழ்ந்த காதல் மறைந்திருந்தது. அதை நான் தெரிந்து கொள்ளாமல் இருந்தது என் தவறு?"

"யார் சொன்னார்கள்?"

"அதை மறைப்பதுதான் பெரும் பிசகு; கள்ள நடத்தையினால் வரும் குற்றமாகும். இதோ நான் நேரே சொல்லுகிறேனே."

"ஒளிப்பாட்டமும் வேண்டாம், இப்படி பட்டவர்த்தனமும் வேண்டாம். மன்னிக்குத் தெரிய வேண்டிய விஷய மெல்லாம் தானே தெரிந்து கொண்டிருக்கிறாள். இதோ சில தினங்களுக்கெல்லாம், இந்தத் துயரமெல்லாம் தலைவிரித்து ஆடிவிட்டு மறைந்துவிடப் போகிறது. இதற்காக வீண் கயிறு திரித்துக் கொண்டு இழுத்துப் பறித்துக் கொள்வானேன், அண்ணா! மன்னி சொல்லுவதைத் தான் கேளேன். அதற்குச் சரியான பதில் சொன்னால் அப்பொழுது தானே எல்லாம் சரியாகப் போய்விடும்."

● நீரஜா அறையினுள் வருவதைப் பார்த்ததும் ரமேன் வெளியே போய்விட்டான்.


நீரஜா ஆதித்தியனைக் கண்டவுடன் தரை மீது உருண்டு அவனுடைய காலடியில் தலையை வைத்துக் கம்பலை கடையும் குரலில், "மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள் என்னை. நான் குற்றம் செய்து விட்டேன். இத்தனை நாளைக்குப் பிறகு என்னைத் துறந்து விடாதீர்கள்! என்னைத் தள்ளிவிடாதீர்கள்" என்றாள்.

ஆதித்தியன் அவளைத் தூக்கித் தன் மார்புறத் தழுவி, மெல்லக் கட்டிலில் படுக்க வைத்தான். "நீரு, உன் வேதனை எனக்குத் தெரியாதா?" என்றான்.

ஓயாமல் அழுதாள் நீரஜா. ஆதித்தியன் அவளுடைய தலையை மெதுவாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கையை எடுத்துத் தன் மார்பிடை அழுத்திக் கொண்டு நீரஜா, "நிச்சயமாகச் சொல்லுங்கள், என்னை மன்னித்து விட்டீர்களா? நீங்கள் பிரஸன்ன முகம் காட்டாது போனால், இறந்து போன பின்பும் என் ஆத்மா சாந்தியை அடையாது" என்றாள்.

"நீரு, உனக்குத் தெரியும். நடுநடுவே நமக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டதுண்டு. அதனால் நம்முடைய ஒற்றுமைக்கு எப்போதாவது பங்கம் விளைந்ததுண்டா?"

"இல்லை. ஆனால் இதற்கு முன்பு, ஒரு நாள் கூட நீங்கள் என்னைத் தனியே விட்டுச்



பூஜை அறையில் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள்.



சென்றதில்லை. இப்போது அந்த மாதிரி என் போக வேண்டும்? இவ்வளவு கொடூர மனமுள்ளவராகத் தங்களை ஆக்கியது யாரோ?"

"அநியாயம் செய்து விட்டேன், என் சீரா! என்னை மன்னித்து விடு."

"எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். என்னைத் தண்டிப்பவரும் நீங்களே, தடுத்தாட்கொள்பவரும் நீங்களே. இந்தப் பாழும் உடலினால் அல்லவோ உங்கள்மேல் நான் விபரீத சந்தேகம் கொண்டு இந்தக் கதிக்கு வந்தேன். ரமேனிடம் சொல்லி யிருந்தேன், ஸரளாவை இங்கே அழைத்து வரும்படி. அவன் ஏனோ இன்னும் வரவில்லை?"

ஸரளாவை அழைத்திருக்கும் சமாசாரத்தைக் கேட்டதுமே திக்கென்றது ஆதித்தியனுடைய உள்ளத்தில். "ராத்திரி நேரமாகிறதே. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

அதே சமயம் சீராஜா, "அதோ அவர்கள் வருகிற சத்தம் கேட்கிறது. கதவருகில் நின்று கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது? ரமேன், நீங்கள் வரலாம் உள்ளே" என்றாள்.

ஸரளாவுடன் ரமேன் உள்ளே நுழைந்தான். சீராஜா படுக்கையி லிருந்து எழுந்து நின்றாள். ஸரளா, சீராஜாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

"ஸரளா, என் தங்கை நீ; வா என் கிட்டே" என்று சொல்லிக் கொண்டே அவளை இழுத்துத் தன் பக்கத்தில் படுக்கையில் உட்கார வைத்தாள். தலையணையின் கீழிருந்த நகைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு நல்முத்து மாலையை வெளியே எடுத்து ஸரளாவின் கழுத்தில் இட்டாள். "நான் சிதையில் எரியும்போது கூட இந்த மாலை என் கழுத்திலேயே இருக்க வேண்டு மென்று ஒருநாள் நான் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அதைவிட இவ்வாறு செய்வதே மேலாகும். என்னுடைய ஸ்தானத்தில் இருந்து இதை நீ கடைசி நாள் வரை அணிந்திருக்க வேண்டும். இந்த மாலையை விசேஷ தினங்களில் நான் பூண்டிருந்தது உங்கள் அண்ணாவுக்குத் தெரியும். உன் கழுத்தில் இந்த மாலையைப் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு அந்தப் பழைய கவனமெல்லாம் வரும்."

"அக்கா, நான் இதற்குத் தகுதியுடையவள் அல்ல. எதற்காக என்னை இவ்வாறெல்லாம் அவமானப் படுத்துகிறீர்கள்?"

தான் அன்று செய்யும் ஸர்வத்தியாக வேள்வியில் இது ஒரு அங்கமென சீராஜா கருதினாள்போலும். ஆனால் உள்ளத்தினுள்ளே கனியும் ஒரு தீ இந்தத் தியாகத்தின் மூலம் சுடர்விட்டெழுவது அவளுக்கே தெரியவில்லையோ என்னவோ! இந்த நடத்தை ஸரளாவின் மனத்தை நோகச் செய்திருக்குமென்று ஆதித்தியன் உணர்ந்தான்.

"அந்த மாலையை என்னிடம் கொடேன், ஸரளா! அதற்குரிய மதிப்பெல்லாம் என்னிடத்திலிருந்து வரவேண்டுமே தவிர வேறு எவரிடத்திலிருந்தும் எதிர்பார்க்க முடியாது

அதை நான் யாருக்குமே கொடுக்க மாட்டேன்" என்றான்.

"என் தலை எழுத்து! நான் இவ்வளவு செய்தும் உங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஸரளா! இந்த இடத்தை விட்டு நீ போய் விடப் போவதாகக் கேள்விப்பட்டேன். அந்த மாதிரி நடக்க நான் ஒருபோதும் விடேன். என்னுடைய சம்ஸாரத்தில் உன்னைப் பிணைத்துவிடப் போகிறேன். இந்த மாலை அதன் அறிகுறி. இந்தப் பத்திரத்தை உன் கையில் ஒப்படைத்து விட்டால்தான் எனக்கு அமைதியான சாவு வரும்."

"அக்கா, நீ நினைப்பது தவறு. இந்தத் தொல்லையில் என்னைப் பிணைக்க வேண்டாம், அதனால் ஒரு நன்மையும் விளையாது."

"அதென்ன வார்த்தை, ஸரளா?"

"நான் வாஸ்தவமாகவே சொல்லுகிறேன்: இதோ உங்கள் எல்லார் முன்னிலையிலும் சொல்லுகிறேன். ஒரு பெரும் பாக்கியத்தைப் பெறாமல் நான் ஏமாற்றமடைந்த போதிலும், பிறரை வஞ்சித்தாகிலும் அதை அடைய வேண்டுமென்கிற விருப்பம் எனக்கு இல்லை. இதோ அக்கா, உன் பாதங்களில் விழுந்து சேவிக்கிறேன். நான் போய் வருகிறேன். இது நான் செய்த பிழையன்று; உள்ளுற நம்பி ஒவ்வொரு நாளும் நான் வழிபடும் அந்தக் கடவுள் செய்த பிழையே இது. அந்தக் கடவுள் பற்றும் இன்றோடு முடிவடைந்து விட்டது" என்று கூறிவிட்டு ஸரளா அறையிலிருந்து வெளியேறினான்.

அதைக் கண்ட ஆதித்தியனாலும் அங்கே நிற்க முடியவில்லை; அவனும் போய் விட்டான்.

● "ரமேன், இதென்ன கடைசியில் இப்படி முடிந்தது? ஏதாவது வாயைத் திறந்து சொல்லேன்" என்றான் நீரஜா.

"இதற்காகத்தான் நான் இன்றைக்கே இந்த நாடகம்வைத்துக் கொள்ள வேண்டாமென்றேன்."



"நான் என் மனசை விட்டுத்தானே பேசினேன. அது அவனுக்குப் புரியவில்லையா, என்ன?"

"புரிந்திருக்கும். ஆனால் உன் மனசை நன்றாகத் திறக்கவில்லை யென்று எண்ணிக் கொண்டிருக்கலாம். நீ வெளியே பேசினது உள்ளத்தின் சுருதியோடு சேர்ந்திருக்கவில்லை."

"இன்னும் தெளிவாக எப்படி எடுத்துச் சொல்வது? ரமேன், யாரை அண்டினால் இதன் நுட்பத்தைக் கிளர்ந்து கூறுவார்கள்?"

"நான் இருக்கிறேனே, மன்னி. உன்னுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீ நிச்சிந்தையாகத் தூங்கு, போ!"

"தூக்கம் எப்படி வரும் எனக்கு? இந்த வீட்டை விட்டு அவர் போய்விட்டால் என்னுடைய மரணவஸ்தையில்தான் அந்தத் தூக்கம் வரும்."

"அவராவது உன்னைத் துறந்துவிட்டுப் போவதாவது! அவருக்கு அந்த மாதிரி விருப்பமும் இல்லை; வலிமையும் இல்லை. இந்தா மருந்து; இதைக் குடித்து விட்டு நன்றாகத் தூங்கு, மன்னி! நீ கண்ணயர்ந்த பின்பே நான் இந்த இடத்தை விட்டு அகல்வேன்."

"ரமேன்! நீ போ; எழுந்து போய்ப் பாரேன். அவர்கள் எங்கே போயிருப்பார்கள்? பார்த்துக் கொண்டு வா. உன்னால் முடியாது போனால் நானே எழுந்து போவேன்; இதனால் பாதி வழியில் என் பிராணன் போனாலும் போகட்டும்" என்றான் நீரஜா.

"சரி, சரி, நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு ரமேன் வெளியில் சென்றான்.

(தொடரும்)



கம்பர் தரும் காட்சி

[டி. கே. சி.]

45. தவம் செய்யக் கிடைக்குமா !

சுமந்திரனுக்கு இராமனை விட்டு விட்டு அயோத்திக்குப் போகவா முடியும்! அழுதான்; மண்ணில் விழுந்து புரண்டான்; என்ன வெல்லாமோ சொல்லிச் சொல்லிக் கதறினான்.

சுமந்திரன் படுகிற கஷ்டத்தை ராமன் உணர்ந்து கொண்டான். அவனை அப்படியே கையால் எடுத்து மெள்ள ஒதுக்கமான இடத்துக்குக் கூட்டிக் கொண்டு போனான். விஷயத்தையும் சொல்ல ஆரம்பிக்கிறான்.

தடக்கையால் எடுத்(து),அவற்
தழுவிக், கண்ணநீர்
துடைத்துவே றிருத்தி, மற்(று)
இனிய சொல்லினான்,—

இப்படிச் சொன்னவன் யார் என்று தெரிய வேண்டாமா நமக்கு?

ராமனுடைய குணநிசயத்தில் மூழ்கியவராய் அவன் இன்னான் என்று சொல்லுகிறார் கம்பர்.


தடக்கையால் எடுத்(து)அவற்
தழுவிக், கண்ணநீர்
துடைத்து,வே(று) இருத்தி,மற்(று)
இனிய சொல்லினான், —
அடக்கும்ஐம் பொறியொடு
கரணத்(து) அப்புறம்
கடக்கும்வால் உணர்வினுக்(கு)
அணுகும் காட்சியான்.

கடவுள் தத்துவம் யாருக்குப் புலனாகும்? — கண் வழியாகவும் நாசியின் வழியாகவும் ருசி பார்க்கிற வாயின் வழியாகவும் கேட்கிற செவியின் வழியாகவும் தொட்டு உணருகிற உடல்ப் புறத்தின் வழியாகவும், நம்முடைய அறிவு சதா தொழில் பட்டுக் கொண்டிருக்கிறது; அதாவது, நம்முடைய அறிவு புறத்தே போய்க் கொண்டிருக்கிறது.

இப்படிப் போவதைத் தடுத்துவிட்டு. உள் முகமாகப் பார்த்தோமானால் மனசு என்பது தென்படும். அந்த மனசோடு ஒட்டிப் பகுத்தறியும் புத்தி என்றும், சிந்திப்பதற்கு ஆதாரமாக உள்ள சித்தம் என்றும், சிந்தித்த பின் விரும்பவோ வெறுக்கவோ தூண்டும் அகங்காரம் என்றும் மூன்று கரணங்கள் இருக்கின்றன. மனசையும், இந்த மூன்று கரணங்களையும் உற்றுப் பார்ப்போமானால், அவை மூலமாகத் தொழில்ப் படுவது 'நாம்' அல்ல, கடவுள் தான் என்பது............தெரிய வரும். ஆகவே ஞானிகள், கரணங்களையெல்லாம் கடந்து பார்க்கிற தெளிவான ஞானத்தை யுடையவர்கள், அவர்களுக்கே இறைவன் காட்சியளிக்கிறான். ராமன் அத்தகைய ஞானி. கடவுளோடு ஒன்றுபட்டவன். அதனால் ராமன் கடவுள் தத்துவந்தான் என்கிறார் கவிஞர்.

சுமந்திரனைப் பார்த்து ராமன் சொல்லுகிறான் :—

"பிறக்கிறது என்று ஏற்பட்டு விடுகிறது. அது காரணமாக இன்ப துன்பங்களெல்லாம் வந்து சேரு




கின்றன. அந்த இன்ப துன்பங்களை எப்படி வைத்துப் பார்க்க வேண்டுமோ அப்படி வைத்துப் பார்க்கும் ஞானி அல்லவா நீ? வாஸ்தவந்தான். அயோத்திக்குத் திரும்பிப் போனால் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் உன்னைப் பழிப்பார்கள். அந்தப் பழியைப் பங்கு போடுவதற்கு யாருமே இல்லைதான். ஆனால் உன் உள்ளமானது என்ன சொல்லும்! சத்தியத்தை இந்த விதமாகக் காப்பாற்றுவதே தர்ம மார்க்கம் என்று சொல்லும்!

பிறத்தல்என்(று) உற்றபின்
பெறுவ யாவையும்,
திறத்(து)உளி உணர்வதோர்
செம்மை உள்ளத்தாய்!
புறத்துறு பெரும்பழி
பொதுவின்(று) எய்தலும்
அறத்திறம்: மறத்தியோ,—
அவலம் உண்(டு)எனா.

[பெறுவயாவையும்: பிறந்தோம் என்ற காரணத்தால், நாம் அடையும் இன்ப துன்பங்களெல்லாம்; திறத்துளி உணர்வதோர்: மயக்கத்துக்கு உள்ளாகாமல் நேர் முறையில் உணரும்; செம்மை உள்ளத்தாய்: தெளிந்த ஞானியே; புறத்துறு பெரும் பழி: வெளியே இருந்து வரும் பழியை; பொதுவின்றி எய்தலும்; இன்னொருவர் உடன் அநுபவிப்பதற்கு இல்லாமல் நாம் ஒருவரே பழிக்கு உள்ளாகிற காரியம் இருக்கிறதே, அதுவும் தர்மமேதான்; மறத்தியோ, அவலம் உண்டு எனா: துன்பம் இருக்கிறது என்ற காரணத்தால் இந்த உண்மையை வேண்டுமென்று மறக்கப் போகிறாயோ?]

மேலும் சொல்லுகிறான்:

நீயோ மகா வீரன். உனக்குத் தெரியாத காரியம் அல்லவே இதெல்லாம்.



நான் ஒருவன் பிறந்த காரணமாகவா சூரிய குலத்துக்கு வசை உண்டாக வேணும்? இதெல்லாம் ஏதோ காட்டுக்குப் போவது எனக்குக் கஷ்டம் என்பது பற்றித்தானே?

கான்புறம் சேறலில்
அருமை காண்டலால்,
வான்பிறங் கியபுகழ்
மன்னர் தொல்குலம்,
யான்பிறந்(து), அறத்தின்நின்(று)
இழுக்கிற்(று) என்னவோ?—
ஊன்திறந்(து) உயிர்குடித்(து)
உழலும் வேலினாய்.

[கான்புறம் சேறலில்: காட்டுப்புறமாய்ச் செல்லவேண்டி யிருத்தலால்; அருமை: கஷ்டம்; மன்னர் தொல்குலம்: சூரியவம்சம்; இழுக்கிற்று: இழிவடைந்தது; ஊன் திறந்து: உடலைக் கிழித்து; உழலும் வேலினாய்: உயிர் வேறில்லையா என்று துடித்து நிற்கும் வேலை ஏந்தியவனே!]

தவம் தவம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் பலர். ஆனால் உண்மையான தவம் இன்னதென்று நான் சொல்லுகிறேன். சத்தியத்துக்காக ஒருவன் பெரும் கஷ்டமான காரியத்தைச் செய்வானானால் அதுதான் தவம்.

வினைக்கரும் மெய்ம்மையன்
வனத்துள் விட்டனன்
மனக்கரும் புதல்வனை
என்றல், மன்னவன்
தனக்கரும் தவம்: அது
தலைக்கொண்(டு) ஏகுதல்
எனக்கரும் தவம், இதற்(கு)
இரங்கல், எந்தைநீ!

[வினைக்கு அரும் மெய்ம்மையன்: அரிய செயல்களைச் சாதிப்பதற்கு ஒரே கருவிதான் உண்டு—அதுதான் சத்தியம் என்ற லட்சியத்தைக் கொண்ட தசரத சக்கரவர்த்தி; வனத்துள் விட்டனன் தனக்கு அரும் புதல்வனை என்றல்: மனசுக்கு மிகவும் உவந்த புதல்வனாகிய என்னைக் காட்டிற்குச் செலுத்தினான் என்ற காரியம்; அது தலைக்கொண்டு ஏகுதல்: தந்தையினது கட்டளையை அப்படியே ஏற்றுக் காட்டுக்குப்போகுதல்; இதற்கு இரங்கல்: இது பற்றி நீ வருந்தவா வேண்டும்!'' சந்தேச

ஷப்பட அல்லவா வேண்டும்! எந்தை நீ:: என் அப்பனாகிய சுமந்திரனே!]

அயோத்தியை விட்டு ஜனங்களெல்லாரும் தொடர்ந்து வந்தது பற்றி ராமனுடைய அறிவு திணறுகிறது. அயோத்திக்குத் தனியாய்ப் போவது பற்றி சுமந்திரனுக்கு அறிவு அழிகிறது. சுமந்திரனுடைய மனதைத் திடப்படுத்துவதற்காக ராமன் பெரிய உண்மைகளை எடுத்துச் சொல்லுகிறான். அதைக் கேட்கவும் சுமந்திரனுடைய அறிவு அந்த உண்மைகளில் மெள்ள மெள்ள ஈடுபடுகிறது. இதை அறிந்துகொண்டு ராமன் அழுத்தமாய்ப் பேசுகிறான். கண்டித்த முறையில் கூடப் பேசுகிறான். "வேண்டுமென்று மறக்கிறாய்?" "என்னுடைய குலத்தின் புகழ் எல்லாம் என்னாலா பாழாய்ப் போக வேண்டும்?" இதெல்லாம் கடுமையாகவே ஒலிக்கின்றன. உண்மையில் கடுமை அல்ல. ராமனுக்கு உள்ளம் இளகித்தான் நிற்கிறது. கடைசியாகத் தந்தைக்கும் தனக்கும் எப்பேர்ப்பட்ட பாக்கியம் கிடைத்துவிட்டது! என்று வியந்த வண்ணமாகச் சொல்லுகிறான். ஒரே பரிவில், "என் அப்பனே!" என்றும் சொல்லி முடிக்கிறான். இதை மறுக்க யாருக்குத்தான் முடியும்? அப்பாவி சுமந்திரன் என்ன செய்வான்!

நான்கு பாடல்களும் சுமந்திரனையும் ராமனையும் கம்பரையுமே நன்றாய் இனம் காட்டுகின்றன.

எப்போ போவாரோ?



விருந்தாளி (நண்பர் வீட்டில் வெகு நாள் தங்கிய பிறகு வீட்டுக்காரரைப் பார்த்து):— நாளைக்கு ரயில் எத்தனை மணிக்குத் தெரியுமோ?

வீட்டுக்காரர் (பெரு மூச்சு விட்டு):— ரயில் புறப்பட இன்னும் 16 மணி 30 நிமிஷம் 2 விநாடி பாக்கி இருக்கிறது!

★ ஜானகியைப் பார்த்து ராதை வியக்க ஆரம்பித்தாள். ராதையைப் பார்த்து ஜானகி வியக்க ஆரம்பித்தாள். அதனால் ஏற்பட்ட விபரீத பலனைக் கீழே காணலாம்.

இதென்ன கூத்து?

"வஸந்தன்"

"தட்! தட்! தட்!" "பட்! பட்! பட்!" என்ற சத்தத்துக்கு மத்தியில் இந்தக் கதையை ஆரம்பிப்பதற்காக வருந்துகிறேன். ஆரம்பத்தில் இப்படியிருந்தாலும் மேலே கதையை வாசித்தால் ஒரே பேச்சும் சிரிப்பும்தான். ஆகையால், இப்பொழுது ராமரத்னம் "பட்! பட்" டென்று கதவை இடிப்பதையும், "ஸ்ரீமதி ராதாபாய்! ஸ்ரீமதி ராதாபாய்!" என்று உரக்கக் கூப்பிடுவதையும் தயவுசெய்து கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அந்தச் சத்தத்தை எப்படி நம்மால் சகிக்க முடியவில்லையோ அதே மாதிரிதான் கதாநாயகி ராதையால் கூட முடியவில்லை. அவளும் கொஞ்ச நாழி பொறுத்துப் பார்த்துவிட்டு,

"ஸ்ரீமதி ராதாபாய் என்று இந்த வீட்டில் யாருமில்லை" என்று பதில் சொன்னாள். ஆனால் ராமரத்னம் லேசில் விடுகிறவனாகத் தோன்றவில்லை.

"இப்பொழுது பேசுகிறது யார் குரலோ? உள்ளே கொஞ்சுகிறது எந்தக் கிளியோ?" என்றான்.

"இருங்கள்! தேடிப் பார்த்துச் சொல்கிறேன்!" என்றாள் ராதை.

"கதவைத் திறவுங்கள், ஸ்ரீமதி ராதாபாய்! நானும் கூடத் தேடுகிறேன்" என்றான் ராமரத்னம்.

"மாட்டேன்! 'ஸ்ரீமதி', 'பாய்' இதையெல்லாம் விட்டுத் தலைமுழுகினால் தான் கதவைத் திறப்பேன்" என்றாள் ராதை முடிவில்!

"சரி! இதோ ஸ்நானம் ஆகிவிட்டது."

ராதை கதவைத் திறந்தாள். ராமரத்னம் கிளியைப் பிடிப்பதற்காக உள்ளே ஓடினான். 'விட்டு விடுங்கள்' என்று அந்தக் கிளி கத்திற்று.

"அடாடா! உன் மூக்குக் கூட வர வரக் கிளி மாதிரியே வளைந்து கொண்டு தான் வருகிறது! என்னத்தைச் சொல்ல!" என்றான் ராமரத்னம்.

"ஆமாம்; எனக்கு அப்படித்தான் இருக்கோ?" என்று ராதை கண்ணைக் கசக்க ஆரம்பித்தாள்.

"வேண்டாம்! சமத் தோல்வியோ?" என்று ராமரத்னம் அவளைச் சமாதானம் செய்தான்.

அந்த வீட்டில் எப்பொழுதும் இந்த மாதிரிக் கோலாகலம்தான். இளம் தம்பதிகள் இருவருக்குள்ளும் ஊடலும் கொஞ்சலும் மாறி மாறி வருவது வழக்கம்.

"சமத்தோ இல்லையோ?" என்று ராமரத்னம் சொன்னானல்லவா, அப்பொழுது அவன் கை ராதையின் முகவாய்க் கட்டையின் பக்கம் போயிற்று. அதே சமயத்தில் சொல்லி வைத்தது போல் "ஸார்! ஸார்!" என்று யாரோ கரூர் கண்டிப்பாகக் கூப்பிடுவதைக் கேட்டு ராமரத்னம் அப்படியே நின்றுவிட்டான். இந்த மாதிரி தனக்கு இடைஞ்சல் செய்யும் சத்துரு யார் என்று தெரிந்து கொள்வதற்காகத் திரும்பிப் பார்த்தான்.

"நான் தான்; யாருமில்லை! குடக்கூலிக்கு இங்கே இடம் கிடைக்குமா என்று கேட்பதற்காக வந்தேன்" என்று கேட்டுக்கொண்டு ஒரு வாலிபன் அவன் எதிரில் வந்து நின்றான். ராதை லஜ்ஜையுடன் போய்விட்டாள்.

ராமரத்னத்துக்கு முதலில் கோபமாக இருந்தது. "அழகாயிருக்கிறது! வீடு பார்க்கிற லட்சணம்" என்று நினைத்தான். பிறகு, சமாளித்துக் கொண்டு "எத்தனை ரூபாயில் இடம் வேண்டும்?" என்று கேட்டான். வந்த ஆசாமி மிகவும் யோக்கியனாகத் தோன்றியது. ஒரு புருஷன் மனைவிக்குப் போதுமான இடம் கிடைத்தால் போதுமென்றும் எவ்வளவு வாடகை வேண்டுமானாலும் கொடுப்பதாகவும் சொன்னான்.

வெகு நாட்களாகவே, வீட்டில் ஒரு பாகத்தை வாடகைக்கு விடவேண்டு



மென்று ராமரத்னம் நினைத்திருந்தான். முக்கியமாக, தான் ஆபீஸுக்குப் போனதும் ராதை தனியாக இருப்பதை உத்தேசித்துத்தான். வீட்டில் ஒரு குடித்தனம் வைத்துக் கொண்டால் ராதைக்குத் துணையாக இருக்குமல்லவா?

கிருபாநிதியும் ஜானகியும் புது வீட்டுக்குக் குடி வந்து நாலு நாள் ஆகவில்லை. ராதையும் ஜானகியும் ரொம்ப சிநேகமாகி விட்டார்கள்.

ஜானகியின் அடக்க சுபாவமும் அனபும் ராதையைப் பெரிதும் வசீகரித்து விட்டன. அது மாதிரியே, ராதையின் சரளமான சுபாவமும், பெருந்தன்மையும் ஜானகியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. இவ்விதம் ஒருவரை யொருவர் பரஸ்பரம் வியக்கத் தொடங்கி விட்டார்கள்.

இத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை; அவர்களிடம் இருந்த பரஸ்பர விசுவாசம் அவர்கள் மனப்பான்மையில் ஆச்சரியமான மாறுதலை உண்டாக்கிற்று.

"ச்சீ! நான் எப்பொழுது பார்த்தாலும் அவருடன் 'லொட லொட' என்று பேசிக் கொண்டேயிருக்கிறேனே! ஜானகியும் அவள் புருஷனும் வாயைத் திறந்து அனாவசியமாக ஒரு வார்த்தை பேசுகிறார்களா? கண்ணினாலல்லவா இருவரும் பேசிக் கொள்கிறார்கள்! ஆஹா! என்ன அடக்கம்! என்ன பதவிசு! இனிமேல் நானும் ஏன் ஜானகியைப் போல் வெகு அடக்கமாக இருந்து கொண்டு கண்ணினால் பேசக்கூடாது?" என்று ராதை கேட்டுக் கொண்டாள்.

ஜானகியின் மனதிலும் அப்பொழுது ஒரு தீர்மானம் உருவாகிக் கொண்டிருந்தது. "ஐயய! உம்மணாம் மூஞ்சி மாதிரி யல்லவா நாம் குடித்தனம் செய்கிறோம்—ஊமைகள் போல! ராதை எவ்வளவு கலகலப்பாகப் பேசுகிறாள்? அவர்கள் இருவரும் எவ்வளவு ஜோராக இருக்கிறார்கள்! எப்பொழுது பார்த்தாலும் பேச்சு, சிரிப்பு, குதூகலம்! நானும் அவள் மாதிரியே இருக்க வேண்டும்" என்று ஜானகி தீர்மானித்தாள்.

சாயங்காலம் ராமரத்னம் வீட்டுக்கு வந்ததும், ராதை மிகமிக அடக்கமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நூல் பின்னிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். ஆனால் புதிதாக மனைவி கற்றுக்கொண்ட அடக்கத்தைக் கண்டு அவனுக்கு மெச்சத் தோன்றவில்லை. அவன் முகத்தில் ஆச்சரியமும் திகைப்பும்தான் அப்பொழுது குடி கொண்டிருந்தன.

"காப்பி கொண்டு வாயேன்!" என்றான் ராமரத்னம்.

ராதை நூலைக் கீழே வைத்தாள். "இதோ!" என்று சொல்லி விட்டு அடக்கமாக உள்ளே போனாள்.

ராமரத்னத்தின் திகைப்பு அதிகமாயிற்று.

ராதையா இப்படி யிருக்கிறாள்? அவள் என்னத்திற்காக 'உர்' ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாள்? திடீரென்று அவளுக்கு என்ன வந்து விட்டது?

ஒன்றும் புரியாமல் நின்றபடியே ராமரத்னம் காப்பியைச் சாப்பிட்டு விட்டு வாசற் பக்கம் வந்தான். பச்சை மிளகாயைக் கடித்தவன் மாதிரி அவன் முகம் இருந்தது. அதே சமயத்தில் 'காட்லிவர் ஆயில்' சாப்பிட்டவன் முகம் மாதிரி வைத்துக் கொண்டு கிருபாநிதியும் எதிரே வந்தான். அவனும் ஜானகியிடம் எதிர்பாராத மாறுதலைக் கவனித்துவிட்டு திக்பிரமை பிடித்துப் போயிருக்கிறான் என்று சொல்ல வேண்டியதில்லை.

"ஏன், ஸார்! ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று ராமரத்னம் கிருபாநிதியைக் கேட்டான்.

"ஒன்று மில்லை; கொஞ்சம் தலைவலியாக இருக்கிறது! ஆமாம்; நீங்கள் ஏன் ஏதோ மாதிரி இருக்கிறீர்கள்" என்று விசாரித்தான் கிருபாநிதி.

"கொஞ்சம் வயிற்றுப் புரட்டல்" என்று பொய் சொன்னான் ராமரத்னம்.

"அப்படியானால் டாக்டரிடம் காண்பியுங்களேன்."

'டாக்டர்' என்ற வார்த்தையைக் கேட்டதும் சட்டென்று ராமரத்னத்திற்கு ஒரு எண்ணம் உதித்தது. ராதைக்கு உடம்பு சரியாக இல்லையென்றும் அதுதான் அவள் மாறுதலுக்குக் காரணமென்றும் ஊகிக்க அவனுக்கு வெகு நாழியாக வில்லை. "என்ன உடம்பு?" என்று அவளை ஒரு வார்த்தை கூடக் கேட்காததற்காகத் தன்னைக் கடிந்து கொண்டான். உடனே டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து காண்பிப்பதுதான் நல்லது என்று அவனுக்குத் தோன்றிற்று.

சிறிது நாழிகை கழித்து "வாருங்கள்! வாருங்கள்!" என்று வாசற்படியில் நின்று கொண்டிருந்த ராமரத்னம் டாக்டரை வரவேற்றுக் கொண்டிருந்தான்.

இதே சமயத்தில், இருபாகியும் ஓட்டமாக ஓடி வந்து, "வரவேணும் இப்படி! இப்படி" என்று டாக்டரைக் கூப்பிட்டான்.

"ஓ! நீங்களும் இங்கேதான் இருக்கிறீர்களா?" என்று டாக்டர் கேட்டார்.

டாக்டரை இருவரும் உள்ளே அழைத்து வந்தார்கள்.

"ராதை! இப்படி வந்து டாக்டரிடம் கையைக் காண்பி!" என்றான் ராமரத்னம்.

"ஏன், எனக்கு என்ன உடம்பு?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் ராதை.

"ஜானகி! இப்படி வா! டாக்டர் வந்திருக்கிறார்" என்றான் இருபாகி.

"இது என்ன கூத்து?" என்று கேட்டுக்கொண்டே ஜானகி வந்தாள்.



பையும் கையுமாய் வந்த லேடி டாக்டரைப் பார்த்துவிட்டு, "இந்தாருங்களேன்!" என்று ராதை தன் கணவனைக் கூப்பிட்டாள்.


"உங்களைத்தானே!" என்று ஜானகியும் இருபாகியைக் கூப்பிட்டாள்.

இரண்டு தம்பதிகளும் அருகே இருந்த அறைக்குள்ளே போனார்கள். அவர்கள் உள்ளே சென்ற சில வினாடிகளுக்கெல்லாம் 'கொல்'லென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. அவர்கள் மேலும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே வெளியே வந்தார்கள்.

"என்ன விசேஷம்? எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று டாக்டர் மனோகரம் கடைசியில் கேட்டுவிட்டான்.

"டாக்டர்! அது பெரிய வேடிக்கை! நன்றாய்ச் சிரித்துவிட்டுச் சாவகாசமாய்ச் சொல்கிறோம்! இந்தாருங்கள் 'விஸிடிங் பீஸ்'" என்று ராமரத்னமும் இருபாகியும் பணத்தைக் கொடுத்துவிட்டு மேலும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டேயிருந்தார்கள்.

டாக்டர் மோட்டாரில் ஏறிக்கொள்ளும்போது "இந்தப் புருஷர்களுக்கல்லவா முதலில் சிகிச்சை செய்ய வேண்டும் போலிருக்கிறது!" என்று சொன்னது அவர்கள் காதில் விழவில்லை!



டாக்கி டைரக்டர் (பிரதான நட்சத்திரத்தைப் பார்த்து):—இப்பொழுது மனித சஞ்சாரம் இல்லாத தீவில் தவிப்பதுபோல் முகத்தை வைத்துக் கொள் பார்க்கலாம்!

★ இதனால் மாட்சிமை மிக்க மன்னர் சர்க்கார் இந்திய மக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் ....

தேசம் பிழைத்தது!

“ நாடோடி ”

● ஒரு நாள் காலை பதினொரு மணி இருக்கும். டில்லி வைஸ்ராய் மாளிகையில் வைஸ்ராய் லின்லித்கோ பிரபு, ஒரு ஹாலில், ஒரு பக்கமாய்ப் போடப்பட்டிருந்த சோபாவில் சாய்ந்து கொண்டு ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின் புறத்தில் உள்ள சுவரில், அவர் தலைக்கு மேலே, பின்வரும் விளம்பரம் காணப் பட்டது :

“ இதனால் மாட்சிமை மிக்க மன்னர் சர்க்கார் இந்திய மக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், நாட்டின் சமூகத் தலைவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தேசிய மந்திரி சபை அமைக்க முன் வரும் பட்சத்தில் அரசாங்கத்தை அவர்கள் கையில் ஒப்படைக்க எங்களுக்கு யாதொரு தடையுமில்லை. ”

அப்பொழுது வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசி உள்ளே நுழைந்தார்.

“ ஐந்து பேர் தங்கள் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் ” என்றார்.

“ யார் அவர்கள் ? ”

“ நாட்டின் பிரதிநிதிகளாம். தேசிய மந்திரி சபை அமைப்பதற்காக வந்திருக்கிறார்களாம். ”

“ இதுவரை அவர்கள் எத்தனையோ தடவை வந்தாகிவிட்டது. ஒவ்வொரு தடவையும் எனக்கும் மன்னர் சர்க்காருக்கும் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுத்துவிட்டுப் போயாகிவிட்டது. இப்பொழுது திரும்பவும் எதற்காக வந்து என் கழுத்தை அறுக்கிறார்கள் ? ”

“ இல்லை. இந்தத் தடவை அவர்கள் எல்லாரும் ஒத்துப் போய்விட்டார்களாம். எல்லாருமாகச் சேர்ந்து தேசிய மந்திரி சபை அமைக்கப் போகிறார்களாம். ”

● இந்த வார்த்தையைக் கேட்டதும் வைஸ்ராய் துள்ளிக் குதித்தார்.

“ எப்படா இவர்கள் வந்து என் தலைமேல் சுமத்தப்பட்டுள்ள பாரத்தைத் தாங்கள் மேற் கொள்வார்கள் என்று காத்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக வந்தார்களா? உடனே வரச் சொல்லும், உடனே வரச் சொல்லும் ” என்று கூறினார். காரியதரிசி வெளியே போனதும் ஐந்து பேர் உள்ளே நுழைந்தார்கள்.

இவர்கள் எல்லாரும் வைஸ்ராயைப் பார்த்துக் கொண்டே நுழைந்ததால் அவர்கள் முதுகுப்புறம் மாத்திரம் எனக்குத் தெரிந்ததே யொழிய அவர்கள் முகம் தெரியவில்லை. ஆனால் இவர்கள் தங்கள் தலையில் தரித்திருந்த குல்லா, தலைப்பாகை, தொப்பி முதலியவற்றிலிருந்து ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், சீக்கியர் ஆகிய வகுப்பாரின் பிரதிநிதிகள் வந்துள்ளனர் என்று தெரிந்து கொண்டேன்.

இவர்களைக் கண்டதும் வைஸ்ராய்க்கே ஆச்சரியமாக இருந்தது. ஏன் ஆச்சரியமாக இருக்காது? இந்தியர்கள் ஒரு காலும் ஒன்று சேரமாட்டார்கள், ஆகவே இந்தியா பிரிட்டிஷாரின் கையை விட்டுப் போகாது என்றுதானே வைஸ்ராய் இதுவரை நினைத்து வந்திருப்பார் ?

● வைஸ்ராய் ஆச்சரியப்படுவதைக் கண்டதும் அந்த ஐந்து பேரும் சற்று திடுக்கிட்டார்கள். கடைசியில் தலைப்பாகை தரித்திருந்த ஆசாமி ஒரு அடி முன் சென்று, சுவரில் ஒட்டப்பட்டிருந்த விளம்பரத்தை வைஸ்ராய்க்குச் சுட்டிக் காட்டினார்.

“ அதன்படி நடப்பதாக உத்தேசம் தானே ? ” என்று கேட்டார்.

“ ஆஹா, சந்தேகமின்றி. பிரிட்டிஷார் தங்கள் வாக்குறுதியை என்றும் காப்பாற்றத் தவற மாட்டார்கள் என்பது உலகம் அறிந்த விஷயமாயிற்றே ! ”

"அப்படியானால் நாட்டை எங்கள் கையில் ஒப்படையும்."

"உங்களுக்குள் அபிப்பிராய பேதம் ஒன்றும் இடையாதே? நீங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, உங்களுக்கிடையில் சண்டையின்றி நாட்டை ஆள்வீர்கள் என்று நான் நம்பலாமா?" என்று வைஸ்ராய் கேட்டார்.

அதற்குத் தலைப்பாகை தரித்திருந்த ஆசாமி, "பிரபுவே! தங்களுக்கு ஏன் இந்த சந்தேகம்? நாங்கள் இனிமேல் சண்டை போட்டுக் கொள்ள மாட்டோம். நாங்கள் எல்லாரும் ஒத்துப் போய்விட்டோம். எங்கள் எல்லாருக்கும் இனிமேல் ஒரே லட்சியம்தான். ஒரே மண்ணில் பிறந்து ஒரே மண்ணில் மறையப் போகும் நாங்கள் இனிமேல் சண்டையின்றிச் சகோதரர்கள் போல் வாழ்வோம்" என்று மிக உருக்கமாகச் சொன்னார்.

மற்ற நான்கு பேரும் இதை ஆமோதிப்பவர்கள் போல், "ஆமாம், பிரபுவே! ஆமாம்" என்று தலையை யாட்டினார்கள்.

"அப்படியானால் உட்காருங்கள். உங்கள் கட்சிகளுக்கு நாட்டில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுங்கள்" என்றார் வைஸ்ராய்.

● உடனே அந்த ஐந்து பேரும் தங்களுடன் தயாராகக் கொண்டு வந்திருந்த தஸ்தாவேஜுகளை வைஸ்ராய் கையில் கொடுத்தனர். வைஸ்ராய் அவற்றை வாசித்துப் பார்த்தார்.

வைஸ்ராயின் முகம் மலர்ந்தது. "மிகவும் சரி. அரசாங்கத்தை உங்கள் கையில் ஒப்படைக்க எனக்கு யாதொரு தடையுமில்லை. நீங்கள் உடனேயே மந்திரி சபை அமைத்துக் கொள்ளலாம். இனிமேலாவது இந்தியர்கள் என்னைக் குறை கூற மாட்டார்கள் என்று நம்புகிறேன். இன்னொரு விஷயம். உங்கள் காரியங்களில் நானோ, என் சிப்பந்திகளோ குறுக்கிட மாட்டோம் என்றும் அந்த அட்லாண்டிக் சமுத்திரம் சாட்சியாக உறுதி கூறுகிறேன்" என்றார்.

பிறகு வைஸ்ராய் அந்த ஐந்து பேருடனும் கை குலுக்கினார். தமக்கு இருந்த சந்தோஷத்தில் வைஸ்ராய் அவர்கள் கைகளை குலுக்கு, குலுக்கு என்று குலுக்கி விட்டார். பாவம், அவர்கள் கைகள் சுளுக்கிக் கொண்டு விட்டன! கைகளை உதறிக் கொண்டே அவர்கள்



தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து என் பக்கம் திரும்பினர்.

● அவர்களைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! "அட பாவிகளா! நீங்களா இந்தியாவின் முதல் தேசிய மந்திரி சபையை அமைக்கப் போகிறீர்கள்?" என்று கதறினேன். அவர்கள் என்னைப் பார்த்து நகைத்துக் கொண்டு வெளியே சென்றார்கள்.

நீங்களும் நானும் எதிர்பார்த்தது போல் அவர்கள் இந்திய சமூகங்களின் தலைவர்கள் அல்ல. அவர்கள் ஸ்ரீமான்கள் காலரா, மலேரியா, பஞ்சம், வகுப்புக் கலகம், யுத்த பீதி ஆகியவர்கள்தான். ஒவ்வொருவரின் பெயரும் அவரவர்கள் மார்பில் பொறிக்கப் பட்டிருந்தது!

● நான் உடனே அலறி யடித்துக் கொண்டு வைஸ்ராயண்டை சென்றேன். "வைஸ்ராய் பிரபுவே! மோசம் போய்விட்டீர்கள்! மோசம் போய்விட்டீர்கள்! இவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளாமல் இவர்கள் கையில் அரசாங்கத்தை ஒப்படைத்து விட்டீர்களே! குல்லாவும், தலைப்பாகையும், தொப்பியும் போட்டுக்கொண்டு வந்து அவர்கள் தங்களை ஏமாற்றிவிட்டுச் சென்று விட்டார்களே!" என்று கதறினேன்.

வைஸ்ராய் என்னைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தார். "நான் அவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளாமல் அரசாங்கத்தைக் கொடுத்து விடவில்லை. இதோ பாரும், சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரம். அதன்படிதான் நடந்தேன்" என்றார்.

"தாங்கள் கூறுவது ஆச்சரியமாக இருக்கிறதே! நாட்டின் சமூகத் தலைவர்களா இவர்கள்?"

"ஆம். அவர்கள் என்னிடம் கொடுத்த நீஸ்தாவேஜுகளி லிருந்தும், தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளி லிருந்தும் தற்சமயம், இந்தியாவில் இவர்கள் கட்சிகள் தான் வலுப்பெற்று இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் நாட்டின் பிரதிநிதிகள் அல்லவென்று நான் எப்படி மறுத்துக் கூற முடியும்?"

"அப்படியானல் இனிமேல் என்றென்றைக்கும் இவர்கள் தாண்டவம் தானு?"

"நான் என்ன பண்ணலாம்? உங்கள் தலைவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டு இந்தப் புது மந்திரிகளைத் துரத்தி விட்டுத் தாங்கள் அரசாங்கத்தை ஒப்புக் கொள்ள முன்வராத வரையில் இவர்கள் ஆட்சிதான் நடக்கும் என்று தோன்று கிறது" என்றார்.

அப்பொழுது கதவைத் திறந்து கொண்டு ஸ்ரீமான் காலரா உள்ளே நுழைந்தார். "என்ன மிஸ்டர்! இனி மேல் ஏதாவது சொல்ல வேண்டி யிருந்தால் என்னிடம் சொல்ல வேண்டும், தெரிந்ததா? வைஸராயிடம் அல்ல" என்று என்னைப் பார்த்து ஒரு முழி முழித்தார். நான் நடுங்கிப் போய் "ஹா!" என்று கதறி விழித்துக் கொண்டேன்.

* • *

"என்ன இது! காப்பியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்குகிறீர்களே! இந்தாருங்கள் பேப்பர்" என்று அப் பொழுதுதான் வந்த தினசரிப் பத்திரி கையைக் கொடுத்தாள் என் மனைவி. பத்திரிகையைப் பிரித்ததும், முதல் பக்கத்தில் போட்டிருந்த செய்தியைப் பார்த்து விட்டுத் துள்ளிக் குதித்தேன். "தேசம் பிழைத்தது!" என்று கூவி னேன். ஏனெனில் ஜெனரல் வேவல் புது வைஸராயாக வரப் போகிறார் என்று கண்டிருந்தது! இராணுவ வைஸராயாகிய ஜெனரல் வேவல், சமூகத் தலைவர்கள் ஆகட்டும், வேறு யார் ஆகட்டும், யார் ஒன்று சேர்ந்து வந்து கேட்டாலும், அவர்களிடம் சர்க்காரை ஒப்புவித்துவிட மாட்டா ரல்லவா?

★ "சண்டைக்கு எடுபிடி மாடுபிடி" என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோமல்லவா? இந்தப் பழமொழியில் புதைந்து கிடக்கும் பழைய வழக்கத்தைப் பற்றித் தொல்காப்பியர் என்ன சொல்கிறார், பார்க்கலாம்.

தமிழ் வளர்ந்த கதை

பி.ஸ்ரீ.

8. தொல்காப்பியப் போர் முறைகள்

"தொல்காப்பியப் போர்கள்" என்றால், சென்ற சில ஆண்டுகளாகத் தொல்காப்பியத்தையே போர்க்களமாகவோ, போர்க் கருவியாகவோ கொண்டு சிலர் கிளப்பி விடும் புதிய ஆராய்ச்சிப் போர்கள் என்றே இந்நாளில் பலரும் நினைக்கிறார்கள். அதாவது: புத்தப் புதிய "ஜாதி"ச் சண்டைகளான ஆரிய — திராவிடப் போர்கள், (கடல் கொண்டதும், பிறபாஷைகள் கவர்ந்து கொண்டதுமான) திராவிடஸ்தானப் போர்கள், வடமொழி தென்மொழிச் சண்டைகள் —இத்யாதி! ஆனால் இந்தப் "போர் முறை"களையாவது, பேனா முனைகளிலும், பேச்சு முனைகளிலும் நிகழும் வீரச் செயல்களையாவது இந்தக் கட்டுரையில் நான் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்பும் தமிழ் நாட்டிலே வழங்கிவந்த நிஜமான போர் முறைகளைத்தான் சுருக்கமாகச் சொல்லப் போகிறேன்.

போர்கள் உலக சரித்திரத்தின் ஒரு முக்கியமான பகுதி; பிராணாதாரப் போராட்டம் பிராணி வர்க்கத்தின் இயற்கை விதி; மனிதப் பிராணிக்கும் இதுதான் விதி; செடிகளில் கூடப் போரிட்டு வாழும் செடிகள் இருக்கின்றனவே! — என்று விவகரிப்பவர்கள் உண்டு. பண்டைத் தமிழர்களும் பெரும்பாலும்,

> ஒருவனை ஒருவன்
> அடுதலும் தொலைதலும்
>
> புதுவ தன்(று): இவ்
> வுலகத்(து) இயற்கை
>
> (புறநானூறு)

[அடுதல்: வெல்லுதல். தொலைதல்: தோற்றல்.]

என்று எண்ணினார்கள். தொல்காப்பிய முனிவரும் இப்படித்தான் எண்ணி விட்டாரா?

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்குமுன், தொல்காப்பியர் கண்ட போர் முறைகளை நாமும் கொஞ்சம் கண்டு வருவோம். அந்த நாளில் தமிழர்கள் சிறந்த வீரர்களாயிருந்தார்கள்; அக்காலப் போர் முறைகளில் தக்க பயிற்சி பெற்றிருந்தார்கள்; காடு, மலை முதலான இயற்கை - அரண்களைத் தக்கபடி பயன்படுத்திக் கொண்டார்கள்; செயற்கையாகக் கோட்டை, அகழி முதலான அரண்களையும் அமைத்துக் கொண்டார்கள். கோட்டை மதில் மேலிருந்து அம்புகள் எய்வதற்கு ஒதுக்கிடங்கள் இருந்தன. அங்கே சில யந்திரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அந்த யந்திரங்களை அமைத்துக் கொடுத்தவர்கள் அந்தக் காலத்திலே நமது நாட்டிற்கு வந்திருந்த கிரேக்க யவனர்கள் என்று நினைப்போரும் உண்டு.

"சண்டைக்கு *எடுபிடி மாடு பிடி" என்று ஒரு பழமொழி. சண்டைக்குப் புறப்பட்ட அரசனது பகையரசன் நாட்டிலுள்ள மாடுகளைப் பிடித்துத் தன் நாட்டிற்குக் கொண்டு போவான். பறிகொடுத்த அரசனும் பலசாலியாக இருந்தால், அந்தப் பசுக் கூட்டங்களை மீட்டுப் போவான். இது போரின் ஆரம்பம்.

போருக்குப் பூச் சூடல்


அரசர் ஒவ்வொருவருக்கும் தனித் தனி அடையாளப் பூ உண்டு. அந்தப் பூக்களைக் கொண்டு போர் வீரர்களை இன்ன இன்ன அரசர் படையைச் சேர்ந்தவர்களென்று சொல்லி விடலாம். பசுக் கூட்டங்களைப் பிடிக்கப் போகிற வீரர்கள் சூடிக் கொள்ளும் பூவுக்கு வெட்சி யென்று பெயர். இது பிரகாசமான சிவந்த நிறமுள்ள ஒரு வகைப் பூ; இதன் ஆங்கிலப் பெயர் "காட்டுத் தீ'

* எடுபிடி: முயற்சி.

என்று பொருள் படும் "Flame of the forest" என்று டாக்டர் ஜி. யூ. போப் அபிப்பிராயப் படுகிறார். இந்தப் பூக்களைச் சூட்டிக் கொண்டு போகும் படை வீரர்கள், பகைவர்களின் பசுக் கூட்டங்களுக்குப் பக்கத்திலே மறைந்திருந்து திடீரென்று காட்டுத் தீயைப் போலத் தோன்றி அந்த மந்தைகளை வளைத்துக் கொள்வார்கள். படை யெடுப்பவர்களும், அவர்களை எதிர்த்து வருகிறவர்களும், வஞ்சிப் பூ என்ற பூவைச் சூடிக் கொள்வார்கள். இது ஒருவகை மஞ்சள் நிறப் பூ என்பர். இப்படியே வெவ்வேறு அடையாளப் பூக்களைச் சூட்டிக் கொண்டு கோட்டைகளை முற்றுகை யிடுவார்கள்; சம வெளியிலுள்ள போர்க் களத்திலும் போர் புரிவார்கள்; பகைவரைக் கொன்று வெற்றி யடைவார்கள்.

படை யெடுக்கப் போகும் அரசன் பகைவேந்தனிடம் தன் தூதனை அனுப்புவான். அப்பால் எதிரியின் கோட்டை மதிலை வளைத்துக் கொள்வான். மதிலகத்தே மறைந்திருந்து எதிரிகள் பொழியும் அம்பு மழையைக் கேடகம் இடுகு பரிசை முதலான தோற்கருவிகளைக் கொண்டு தடுப்பார்கள். மதில் அழியத் தொடங்கியதும், எதிரிகள் வெளியே வந்து போர் செய்வார்கள். இல்லாவிட்டால், படை யெடுத்து வந்தவர்கள் மதிற்சுவர் மீது ஏணிகள் சார்த்திக் கோட்டை மீதேறிப் போர் புரிவார்கள். புறமதிலைக் கைப்பற்றி விட்டால், இடை மதில் உள்மதில்களையும் கைப்பற்ற முயற்சிகள் நடைபெறும். ஊரிலே அரண்மனை மதில்களிலும் போர் நடைபெறுவதுண்டு. படை யெடுத்து வந்த அரசன் வெற்றி யடைந்தால், பிடித்த நாட்டிற்கும் தானே அரசனென்று முடிசூடி வீராபிஷேகம் செய்து கொள்வான்; அல்லது கப்பம் வாங்கிக் கொண்டு திரும்புவான்.

அவர்களையுந்தான்!



இன்ஸ்பெக்டர்:—இந்த வீட்டில் ஒரு திருடன் இருக்கிறான். அவனைப் பிடிக்கப் போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா?

பட்டிக்காட்டான்:—ஐயோ! நான் பிள்ளை குட்டிக்காரனுங்க.

இன்ஸ்:—ரொம்ப நல்லது! அவர்களையும் அழைத்துக் கொண்டு வா!

வெற்றிக்கும் மேலானது வீரம்

இப்படிப்பட்ட போர்களில் அம்பால் எய்தும், வேல் கொண்டு எறிந்தும் படை வீரர்களும் படைத் தலைவர்களும் அரசர்களும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு தைரிய சாகஸச் செயல்கள் செய்வார்கள். அபாயத்தையோ, கஷ்ட நஷ்டங்களையோ ஒரு பொருளாகக் கருத மாட்டார்கள்; பேராண்மையையும் வீர மரணத்தையும் ஒப்பற்ற பெரும் பொருளாக மதிப்பார்கள். தலைவன் தானே சேனைக்கு முன் நின்று வெள்ளம் போல வரும் எதிரிகளின் படையை அணைபோலத் தாங்கித் தடுத்துத் தன் படையாளரை உத்ஸாகப் படுத்துவான்.

போர் முனையில் கொல்லப்பட்டு யானையோடு விழுந்த அரசனை வென்றவர்கள் சூழ்ந்து நின்று ஆடி அந்த வீர மரணத்தை மதித்து மரியாதை செய்வார்கள். இதனால் "வெற்றிகூட முக்கியமல்ல; வீரந்தான் முக்கியம்!" என்ற அவர்களுடைய கொள்கை இனிது புலனாகும். வென்ற வேந்தன் பகைநாடு அழிந்ததற்காக இரங்கித் தோற்ற அரசனுடைய வீரத்தைப் பாராட்டி அவனைச் சமாதானப் படுத்துவதும் உண்டு. இப்படிப்பட்ட சண்டைகளில் இரு திறத்தாரும், அவர்களுக்குத் துணையாக வந்த அரசர்களும் பெரும் போர் புரிந்து, ஒருவரும் தப்பிப் போகாமல் ஒக்க மடிந்து போவதும் உண்டு.

போரிலே முகத்திலும் மார்பிலும் பட்ட புண்களைப் பெருமையாகச் சுமந்து அவற்றை வீர சின்னமாகவும், புகழின் கண்ணாகவும் மதித்து வாழ்ந்தார்கள் வீரர்கள். அப்படிக் காயங்களை ஆற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கையையும் விரும்பாமல், அந்தப் புண்களைக் கிழித்துக் கொண்டு இறந்து போவதையே புகழென்றும், உண்மை

யான வீரமென்றும் மதித்த தமிழ் வீரர்களும் அக் காலத்தில் இருந்தார்கள்.

தர்ம யுத்தமும் தர்ம வீரமும்

அந்த நாளிலும் வஞ்சகமாய்ப் போர் செய்து வெற்றியைத் "திருடி"க் கொண்டவர்களும் இருந்தார்கள். எனினும் பொதுவாகப் பார்த்தால், தமிழர்கள் சுத்த வீரர்களாகவும், தர்ம வீரர்களாகவும் விளங்கினார்கள் என்றே சொல்ல வேண்டும். போரின் துவக்கத்தில் மாடுகளைப் பிடித்து வந்ததற்குக் காரணமே, பசுக்கள் முதலியவற்றை அழிக்காமல் தர்ம யுத்தம் செய்ய வேண்டும் என்பதுதான்.

போர் செய்யப் போகிறவர்கள், "நாங்கள் படை யெடுத்துவருவோம். சாதுக்கள், பெண்கள் முதலியோர் அபாயப் பிரதேசங்களி லிருந்து போய் விடலாம்; பந்தோபஸ்தான இடங்களை அடையவேண்டும்" என்று பொருள்பட முன் கூட்டியே எச்சரிக்கை செய்து விடுவார்கள். பசுக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள இயலாத தால், அவற்றை அப் பகைவர் நாட்டி லிருந்து கவர்ந்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு வருவார்கள். இதை ஆசிரியர் தொல்காப்பியர்,

> **வேந்துவிடு முனைஞர்,**
> **வேற்றுப்புலக் களவின்,**
>
> **ஆதந்(து) ஓம்பல்**
> **மேவற் றாகும்**

[வேந்து: வேந்தன்; விடு: ஏவிவிட்ட; முனைஞர்: போர் முனையில் காத்திருந்த படைத் தலைவர்; வேற்றுப்புலம்: பகைவர் நாடு; களவின்: களவினால்; ஆ: பசு; ஓம்புதல்: பாதுகாத்தல்.]

என்று குறிப்பிடுகிறார்.

பசுக்களையும் சாதுக்களையும் தாய்க் குலமாகிய பெண் குலத்தினரையும் கொல்லாமல் பாதுகாத்த வீரர்கள், போரில் முதுகு காட்டி ஓடுகிறவர்களைக் கொல்லுவதும் வீரமல்ல, கோழைத்தனம் என்றே எண்ணினார்கள். பெண்ணின் பெயரை உடையவனைக் கூட அவர்கள் கொல்ல மாட்டார்களாம். குழந்தை யில்லாதவனையும் கொல்ல மாட்டார்களாம். சோர்ந்த உள்ளமுடையவனையும் விட்டு விடுவார்களாம். இப்படிப்பட்ட சுத்த வீரத்தை இந்த நவநாகரிக யுகத்தில் வாழ்வோர் நம்புவதும் அரிதல்லவா?

சலுகை வேண்டாம்

"ஸோமாஸ்"

"ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம்" என்னும் விஷயத்தைப் பற்றி மாலதி, கலாசாலையில் ஒரு விவாதம் நடத்தி விட்டு சென்டிரல் ஸ்டேஷனுக் கருகில் டிராம் ஏற வந்தாள். ஆடி அசைந்து கொண்டு ஒரு டிராம் வந்தது. மாலதி பரபரப்புடன் ஏறினாள்.

மாலதி ஏறினதுதான் தாமதம்; டிராமி லிருந்த ஒருவர் ஆசனத்தை விட்டு எழுந்திருக்க முயன்றார். அதைப் பார்த்ததும் மாலதிக்குக் கோபம் கோபமாக வந்தது.


"ஒரு பெண் வந்தால் புருஷர்கள் என்னத்துக்காக இப்படி எழுந்து நிற்கிறார்கள்? ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்குக் கிடையாதா? ஆண்கள்தான் வண்டியில் நிற்கவேண்டுமோ?" என்று முணு முணுத்துக் கொண்டு அவரை எழுந்திருக்க வேண்டாம் என்று கையினால் ஜாடை காட்டினாள். அவர் மறுபடியும் எழுந்திருந்தார்.

நின்று கொண்டிருந்த மாலதி மறுபடியும் கையமர்த்தி அவரை எழுந்திருக்க வேண்டாம் என்றாள். டிராம் முழுவதும் கூட்டம் நிறைந்திருந்தது. 'வண்டி நிறைந்து விட்டது' என்ற போர்டையும் லட்சியம் செய்யாமல் எல்லாரும் விழுந்தடித்துக் கொண்டு ஏறினர்.

கண்டக்டர் "இடமில்லை! எறங்க! எறங்க! நேரமாகும்!" என்று கதறிக்கொண்டிருந்தான். மறுபடியும் மேற் கூறிய மனிதர் தமது ஆசனத்தி லிருந்து எழுந்திருக்கக் கிளம்பினார்.

மாலதி மறுபடியும் கையமர்த்தி "டிராமில் நீங்கள்தான் நிற்கவேண்டு மென்பதில்லை. பெண்களும் நிற்கலாம்! நீங்கள் உட்காருங்கள்!" என்று கடுமையாகக் கூறினாள்.

இதற்குள் டிராம் நகர ஆரம்பித்தது. உடனே எழுந்து நின்ற நண்பர் பரபரப்புடன் "தயவு செய்து வழிவிடுங்களேன்.



நான் இந்த இடத்தில் இறங்க வேண்டும். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்! வழி விடுங்கள்" என்று மாலதியைப் பார்த்துக் கூறிவிட்டு "ஹோல்டான்!" என்று ஓலமிட்ட வண்ணம் டிராமை விட்டுக் கீழே குதித்தார்.

★ ஆனால் அந்த மதுரமே இப்பொழுது அவனுக்கு வாழ்க்கையில் கசப்பு ஏற்படுவதற்குக் காரணமா யிருந்தான்....

உடைந்த வளையல்

[து. ரா.]

இருபதாம் அத்தியாயம்
ஏன் இந்த மாறுதல்?

ஒரு புருஷன் தான் ஆயிரம் மைலுக்கப்பா லிருக்கும் ஓர் ஊருக்கு மாற்றலாகப் போவதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது அவன் மனைவி வெகு நிதானமாக "ஓஹோ!" என்று பதில் சொன்னால் அவன் வியப்படையாமலிருக்க முடியுமா? தங்கமணி தன் மனைவியின் பதிலைக் கேட்டுச் சிறிது நேரம் மௌனஞ் சாதித்தான். பிறகு சமாளித்துக் கொண்டு விஷயத்தைச் சொல்லலானான்?

"கராச்சியில் ஒரு கிளை ஆபீஸ் திறக்கப் போகிறார்களாம். அதற்கு நான் போய்த்தான் ஏற்பாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டுமாம். எனக்கு இஷ்டமிருந்தால் அந்த ஆபீஸுக்கே என்னை மானேஜராய்ப் போடுகிறார்களாம். மேலே ரூ. 200 சம்பளம் கிடைக்கும். இல்லை, அங்கேயே இருக்க இஷ்டமில்லை யென்றால், நான்கு மாதத்துக்கு மட்டும் அங்கேயே யிருந்து, ஆபீஸ் ஒழுங்காக வேலைசெய்ய ஆரம்பித்த பிறகு திரும்பி வந்து விடலாம். அந்த நாலு மாசத்துக்கும் அதிகச் சம்பளம் தருவார்கள். போகவர சார்ஜும் கொடுப்பார்கள்" என்றான்.

சுசீலா, மேஜை மேலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "என்ன பண்ணுகிறதாக யோசனையோ?" என்றாள்.

"இன்னும் யோசனை பண்ணவில்லை."

சுசீலா சிறிது நேரம் நின்றாள். பிறகு காப்பி டம்ளரை எடுத்துக்கொண்டு சமையலறைக்குப் போகும் பொழுது தன் மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டாள்: "இன்னும் யோசனை பண்ணவில்லை; இன்னும் யோசனை பண்ணவில்லை —"

அன்று — அதாவது மதுரத்துக்குத் தேன் கொட்டிய தினம் — இரவு நடந்த விஷயத்திற்குப் பிறகு கணவன் மனைவிக்கு இடையில் இருந்த உறவின் தினுசே மாறிவிட்டது. முன்பெல்லாம் இருந்த கலகலப்பான பேச்சும் சிரிப்பும் எங்கோ போய்விட்டன. "சுசீலா! சுசீலா!" என்று அவன் எங்கே யிருந்தாலும் தங்கமணி தன் அறைக்குள் இருந்தபடியே நிமிஷத்துக் கொருதரம் கூப்பிடுவான். இப்பொழுது அந்தப் பெயர் அவன் வாயிலே வருகிறதே இல்லை. அவன் பக்கத்திலே இருந்தால் இரண்டொரு வார்த்தை பேசுகிறது; அவ்வளவுதான். ஒருவரையொருவர் கேலி பண்ணுவதும், கோபித்துக் கொள்ளுவதும், சமாதானம் செய்து கொள்ளுவதும் பழைய விஷயங்களாய்ப் போய்விட்டன. இதற்கெல்லாம் காரணம் தங்கமணிக்குச் சுசீலாவிடம் கோபம் ஏற்பட்டிருந்தது என்பதல்ல. அவன் மனதில் கோபமே இல்லை. அதற்குப் பதில் என்று மில்லாத, என்னவென்று விவரிக்க முடியாத பயந்தான் ஏற்பட்டிருந்தது. அத்துடன் அவள் எதிரில் இருக்கும்பொழுது வெட்கத்தினாலும், தலை தூக்கி அவளை நேரே பார்க்கமுடியாத ஓர் உணர்ச்சியினாலும் அவன் அவஸ்தைப் பட்டான். அவளுடன் பேசுவதற்கே சங்கோஜமாக இருந்தது. ஏழு வருஷமாய்த் தன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டு, தன்னுடன் ஒரே மனதாய், சந்தோஷமோ, துக்கமோ, கோபமோ எல்லாவற்றையும் அனுபவித்து வந்த மனைவி திடீரென்று அவன் கண்களுக்கு ஒரு புது மனுஷியாய்ப் போய் விட்டாள்.

அன்று காப்பி சாப்பிட்டதும் உட்கார்ந்தபடியே யோசித்தான். தான் ஆபீஸ் சமாசாரத்தைச் சுசீலாவிடம் கூறியதும் அவள் ஒரு விதமான உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் வெறுமனே "என்ன பண்ணுகிறதாக யோசனை?" என்று கேட்டதை நினைத்துப் பார்த்தான். ஆ! சுசீலா எப்படி மாறிவிட்டாள்! நம்மிடம் அவளுக்கு

இருந்த அன்பெல்லாம் போய்விட்டதா என்ன? நம் விஷயம் ஒன்றும் அவனுக்கு இப்பொழுது சுவாரஸ்யத்தை உண்டு பண்ணவில்லை. 'என்ன பண்ணுகிறதாக யோசனை?' என்று கேட்டானே. ஒரு மாதத்துக்கு முந்தியாக இருந்தால் இவ்வளவுதானா கேட்டிருப்பான்? பாதி சமாசாரம் சொல்வதற்கு முன்பே அவசரப் பட்டுக் கொண்டு தன் அபிப்பிராயங்களை வெளியிட ஆரம்பித்து விடுவானே. அவன் ஓய்ந்த பிறகு தானே என்னைப் பேச விடுவான்? கராச்சிக்குப் போகிறேனென்றால் எவ்வளவு பேச்சுப் பேசி இருப்பான்? அப்படியே பயந்து போயிருப்பானே? — என்ன பண்ணுகிறதாக யோசனை? — ஹூம், அவனைச் சொல்லக் குற்றமில்லை. நான் அன்று ஒரு மிருகத்தைப்போல் நடந்து கொண்டு விட்டேன்! —

திடீரென்று தங்கமணி இந்த மாறுதல்கள் எல்லாம் எதனால் உண்டாயின என்று தன்னையே கேட்டுக் கொண்டான். உடனே மதுரத்தின் ஞாபகம் வந்தது. "பெயரைப் போலவே மதுரமாய்த்தான் இருக்கிறான்" என்று தான் ஒரு சமயம் சொன்னதையும் நினைத்துப் பார்த்துக் கொண்டான். ஆனால் அந்த மதுரமே இப்பொழுது அவனுக்கு வாழ்க்கையில் கசப்பு ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தாள்.

தங்கமணி இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்த சமயம் சுசீலாவும் தன் கணவன் பேசிய விதத்தைப் பற்றி மனோ வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"இன்னும் யோசனை பண்ணவில்லை—!" என்ற வார்த்தைகள் அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

"இன்னும் யோசனை பண்ணவில்லையாம்; சரி, மெள்ளப் பண்ணிக் கொள்ளட்டும். நமக்கென்ன? என்ன பண்ணுவதாக யோசனை, என்று நான் கேட்டேனே; அதைத்தான் நான் எதற்காகக் கேட்க வேண்டும்? நம்மிடம் பேசவே தான் அவருக்கு இஷ்டமில்லையே —"

தங்கமணியைப்போல் சுசீலாவுக்கு ஞாபக மறதி கிடையாது. எவ்வளவு அற்ப விஷயமும், எந்தக் காலத்தில் நடந்ததானாலும் அவள் மனதை விட்டு அகலுவதில்லை. அதுவும் மனது சஞ்சலத்தினால் அல்லல் படும் சமயங்களில்தான் பழைய விஷயங்கள் நேற்று நடந்தவை போல் அவள் மனத் திரையில் தோன்றி அவள் சஞ்சலத்தை அதிகப் படுத்தும். இப்பொழுதும். தன் கணவன் முன்பிருந்த மாதிரியையும் இப்பொழுது இருக்கும் விதத்தையும் நினைத்துக் கொண்டு சஞ்சலப் பட்டாள்.

"அவருக்குக் கராச்சிக்குப் போக வேண்டும் என்று உத்தரவு வந்திருக்கிறது. எவ்வளவு பெரிய விஷயம்! கராச்சி! நம் ஊர் எங்கே, கராச்சி எங்கே? அங்கே போக வேண்டுமாம். இந்த விஷயத்தை எவ்வளவு நிதானமாக நம்மிடம் சொல்லுகிறார்?" — இதை நினைக்கையில், சுசீலாவுக்குச் சென்ற வருஷம் தங்கமணி பங்களூருக்குப் போன விஷயம் நினைவுக்கு வந்தது.

இன்று போல்தான் அப்பொழுதும் தங்கமணி காரில் வந்து இறங்கினான். ஆனால் உள்ளே நுழையு முன்னரே "சுசீலா! சுசீலா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். சுசீலா உள்ளே இருந்து சிரித்துக் கொண்டே வந்தாள். "என்ன அவ்வளவு அவசரம்! எந்தப் பட்டணம் கொள்ளை போகிறது?"



என்று கேட்டுக் கொண்டே. அவன் அப்படியே அவள் தோள் பட்டைகளை விளையாட்டாய்ப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு அவள் வாயைப் பொத்தினான்.

"எந்தப் பட்டணமும் கொள்ளை போகவில்லை. நான்தான் பங்களூருக்குப் போகப் போகிறேன்" என்றான்.

"ஊம், பொய் சொல்லுகிறீர்கள்."

"இல்லை சுசீலா, நிஜந்தான். எத்தனை தரம் உன்னிடம் நான் பொய் சொல்லியிருக்கிறேன்?"

"பங்களூருக்கா? உம், எதற்காக?"

"ஆபீஸ் விஷயமாய்ப் போக வேண்டியிருக்கிறது. நாலைந்து நாள் அங்கே இருக்க வேண்டியிருக்கும்."

"அப்படியானால் நானும் வருகிறேன்" என்றாள்.

"என்னத்துக்கு? நீ என்ன என் ப்ரைவேட் செக்ரிடெரியா?"

"ஊஹூம்—நானும் வருவேன்."

"நாலு நாள் தானே சுசீலா?"

"நாலு நாளானால் கூட நான் மட்டும் தனியாகவா இருக்கிறது?"

"தனி என்ன? அன்று ஆத்திலே போய் இரேன்."

சுசீலா அவனை வருத்தத்துடன் பார்த்துக்கொண்டு, "என்னை அழைத்துக் கொண்டு போக உங்களுக்கு இஷ்டமில்லை" என்றாள்.

தங்கமணி சிரித்துக் கொண்டு, "அதில்லை, சுசீலா! எனக்கும் உன்னை அழைத்துக் கொண்டு போக ஆசைதான். ஆனால் எங்கள் துரை இருக்கிறானே, அவன் வெளியூர் போனால் கூடப் பெண்டாட்டியைத் தன்னோடு அழைத்துக் கொண்டு போகிறதில்லை. நான் உன்னை அழைத்துக் கொண்டு போனால் ஆபீஸிலே எல்லாரும் கேலி பண்ணுவார்களே, துரைக்கு மேலே பெரிய துரையாய் இருக்கிறான் என்று—" என்றான்.

"நீங்களும் துரைதானே? என்னுடைய துரை நீங்கள்—" என்று சுசீலா சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள். இருந்தாலும் அப்புறம் இரண்டு பேருமாய்த்தான் பங்களூர் போனார்கள்.

"அப்படி இருந்தவர் இப்பொழுது எப்படி மாறிப் போய் விட்டார்? ஆனால் தப்பு நம்முடையதுதான். வீணாக அவர்மேல் சந்தேகப் பட்டோம். அவருக்குக் கோபம் வரச் செய்தோம்" என்று எண்ணினாள்.

அடுத்த கணமே அவள், "ஆனால் நம் சந்தேகமும் முற்றிலும் வீணானதுதானா? ஊரெல்லாம் இதைப் பற்றியே பேசுகிறார்களாமே, மன்னி சொன்னாளே. அவர்களுக்கெல்லாம் கூடவா சந்தேகம் உண்டாகி விட்டது? ஆனால் அவர்கள் சந்தேகப் படுகிறார்கள் என்றால் அது வேறே விஷயம். ஊராருக்கென்ன? வம்பளப்பதற்கு என்ன சமாசாரம் அகப்படும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் போல் நாமும் அவர் மேல் சந்தேகப்படலாமா?" என்று நினைத்தாள்.

மதுரம்! — எல்லாம் அவள் வந்த பிறகு ஆரம்பித்ததுதான். எல்லாவற்றிற்கும் அவள்தான் காரணம்! ஆனால் பாவம், அவளை நோகக்கூடாது. அவளைப் போல் அபாக்யவதி யார் இருக்கிறார்கள்?

இப்படி அவள் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் அவளையும் அறியாமல் நன்றாய் இருட்டி விட்டது. வெளியே மரங்களில் இரவைக் கழிப்பதற்காக உட்காரும் பட்சிகள் கிறு கிறு என்று சப்திக்கத் தொடங்கின. திறந்திருந்த ஜன்னல் வழியாய், கரிய வானத்தில் வைரம் பதித்ததுபோல் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்த ஒரே ஒரு தனி நட்சத்திரம் மட்டும் தெரிந்தது. அஸ்தமித்த சூரியனின் மங்கிய வெளிச்சம் உலகை விட்டுப் பிரிய மனம் இல்லாததுபோல் சிறிது நேரம் தயங்கிக் கொண்டிருந்து விட்டு இரவுக்குப் பயந்து ஓடுவது போல் மறைந்தது.

அப்பொழுது அறைக்குள் மதுரம் சத்தம் படாமல் வந்து தன் அருகில் உள்ள முக்காலியில் உட்காருவதைப் பார்த்தாள். அவள் பெருமூச்செறியும் சத்தம் காதில் விழுந்தது. "அக்கா" என்று மெதுவான தழதழத்த குரலில் அவள் கூப்பிட்டது சுசீலாவுக்குக் கேட்டது. அவள் அருகில் நெருங்கி வந்து சுசீலா "ஏன்?" என்றாள்.

அப்பொழுது மதுரம் சட்டென்று எழுந்து அவள் மேல் விழுந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு தன் முகத்தை அவள் மார்பில் புதைத்துக்கொண்டு "அக்கா! அக்கா!" — என்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

(தொடரும்)



உண்மைதான்!

மார்வாடி :—பையா! எங்கே வீட்டில் ஒருவரையும் காணோம். உன் தகப்பனார் எங்கே?

பையன் :—அவர் வீட்டில் இல்லை. வெளியில் போயிருக்கிறார்.

மார்வாடி :—என்னப்பா இப்படிப் பொய் சொல்கிறாய்! அவர் செருப்பு இதோ இருக்கிறதே!

பையன் :—ஆமாம். வீட்டுக்குள்ளேயெல்லாம் செருப்புப் போட்டுக் கொண்டு நடப்பார்களா, என்ன?

—டி. ராஜமாணிக்கம்.

●

அவ்வளவு சிநேகம்

மூத்து :—கோபுவுக்கும் பாபுவுக்கும் சண்டையாமே?

கிட்டு :—இரண்டு பேரும் இணைபிரியாத சிநேகிதர்களென்று கேள்விப்பட்டிருக்கிறேனே.

மூத்து :—அதுவும் உண்மைதான். அவர்களைப் பிரிப்பதற்கு ஐந்தாறு பேர்கள் வேண்டியிருந்தது.

—கே. பாலசுப்பிரமணியன்.

●

எதிர் வெட்டு

பஸ் ஓட்டுபவர் (கோபத்துடன்) :—என்ன ஐயா, தெருவே உமக்குச் சொந்தம்போல் நினைத்துக் கொண்டு நடக்கிறீரே!

வழிப்போக்கன் :—சரிதான் ஐயா! மோட்டாரே உமக்குச் சொந்தம்போல் நினைத்துக் கொண்டு ஓட்டுகிறீரே!

—ஏ. ஸ்ரீநிவாசன்.

●

மூட முடியுமா?

மனைவி :—ஆமாம்; எப்பொழுதும் ரேடியோவைக் கட்டிக்கொண்டு அழுகிறேனே, என்னை விட உங்களுக்கு ரேடியோதான் பெரிசு......

கணவன் :—ஆமாம், நான் இஷ்டப்பட்டால் அதன் வாயை மூட முடிகிறதே! —பி. ஆர். கிருஷ்ணன்.

புரிந்தது

பேத்தி —தாத்தா! இந்தப் புஸ்தகத்திலுள்ள கதையில் ஓர் இடத்தில் அர்த்தம் புரியவே இல்லை.

தாத்தா :—என்ன அது? படி.

பேத்தி :—அந்த ஸ்திரீ ஒரே அடமாய்த் தலையை விரித்துப் போட்டுக்கொண்டு கண்ணீர் விட்டாள், கதறினாள், விம்மி விம்மி அழுதாள்.

தாத்தா :—அதுவா? அவள் ஏதாவது புது தினுசு நகைக்கு அடி போடுகிறாள் என்று அர்த்தம். —கே. வி. சீனு.

●

நிறுத்தி விடாதே!

மனைவி (புதிதாக விவாகமானவள்) :—"தங்களுக்கு நல்ல சங்கீதமென்றால் ரொம்பப் பிரியமாமே?"

நண்பன் :—"ஆமாம், அதனால் பாதகமில்லை. அதற்காக நீ பிடில் வாசிப்பதை நிறுத்தி விடாதே."


—எம். வி. ராஜாமணி.

●

முதல் முட்டாள்!

தகப்பனார் (வாத்தியாரைப் பார்த்து) :—"ஏன் ஸார், நம்ம பையன் எப்படி?

உபாத்தியார் :—அதை ஏன் கேட்கிறீர்கள்? நானொருத்தன் இல்லாவிட்



டால் அவனே தான் வகுப்பில் முதல் முட்டாளாயிருப்பான்.

—ஆர். ஸ்ரீநிவாசன்.



ஏ. ஆர். பி. குரங்கு

[வி. ஜி]

அன்று இரவு பத்து மணி இருக்கும். காட்டில் அபாயச் சங்கு ஒலித்தது. உடனே ஏ. ஆர். பி. குரங்கு ஒன்று தன் ஊதலை எடுத்து ஊதிக் கொண்டே, ஊரிலிருக்கிற விளக்குகளை யெல்லாம் அணைத்து விட்டு வருவதற்காக வெளியே கிளம்பிற்று.

அப்பொழுது ஒரே இருட்டா யிருந்ததால், அது வழியில் கறுப்புச் சட்டை அணிந்து வந்து கொண்டிருந்த ஒரு கரடியின் மீது மோதிக் கொண்டது. தன்னுடன் மோதிக் கொண்ட ஏ. ஆர். பி. குரங்கைப் பார்த்ததும் கரடி, "உமக்குக் கண் தெரிய வில்லையா?" என்று கோபத்துடன் கேட்டது.

உடனே குரங்கு தன் கையிலிருந்த 'டார்ச் லைட்'டை அடித்துப் பார்த்து விட்டு, "என்ன ஐயா, கரடியாரே! எனக்கா கண் தெரியவில்லை? இருட்டில் உம்மைப் போன்ற ஆசாமிகள் வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு வரவேண்டுமென்றால், நீர் கறுப்புச் சட்டை அணிந்து கொண்டு வருகிறீரே?" என்று கேட்டது.



"என்ன சொல்கிறீர்? இம்மாதிரி சமயத்தில் வெள்ளைச் சட்டை அணிந்து கொள்ள வேண்டுமென்று சொல்கிறீர்? ஆமாம், அந்தச் சட்டையின் வெளிச்சத்தில் எதிரி என்மீது குண்டைப் போட்டு விட்டால்?" என்று கரடி கேட்டது.

அதற்குக் குரங்கு, "ஓய்! இம்மாதிரி யெல்லாம் என்னை ஒன்றும்



அனாவசியமாகக் கேட்கக் கூடாது. வெள்ளைச் சட்டை போடு என்றால் போட்டுக் கொள்ள வேண்டியது தான்!" என்று அதிகாரத்துடன் சொல்லி விட்டு, தன் ஊதலை ஊதிக் கொண்டே அடுத்த தெருவிற்கு விரைப்புடன் நடந்து சென்றது.

அங்கே ஒரு வீட்டில் விளக்கைப் போட்டுக் கொண்டு, ஒரு பூனைக் குட்டி பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தது. அந்த வீட்டுக்கு எதிரே நின்று கொண்டு ஏ. ஆர். பி. குரங்கு தன் ஊதலைப் பலமாக

ஊதிற்று. அப்படி ஊதினால் உடனே விளக்கை அணைத்து விட வேண்டும் என்பது தெரியாமல், பூனைக் குட்டி தன் பாட்டுக்குப் படித்துக் கொண்டிருந்தது. பரீட்சையில் முதல் மார்க்கு வாங்க வேண்டும் என்பதில் அதற்கு அத்தனை ஆர்வம்!

ஏ. ஆர். பி. குரங்கு அந்தப் பூனைக் குட்டிக்கு அருகில் சென்று, "ஓய், பூனையாரே! உமக்குக் காது கேட்க வில்லையா?" என்று கேட்டது.

"கேட்க வில்லை!" என்று பூனைக் குட்டி பதில் சொல்லிற்று.

"என்ன! அபாயச் சங்கு ஒலித்தது கூடவா உமக்குக் கேட்கவில்லை?"

"ஓ! அதுவா? கேட்டது!"

"பின் எதற்காக விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்கிறீர்?"

"பரீட்சைக்காக! விளக்கில்லா விட்டால் படிக்க முடியுமா?"

"அது தெரியும், எனக்கு! இப்பொழுது எதிரி குண்டு வீசுவதாக நினைத்துக் கொண்டு, விளக்கை அணைத்து விட்டுப் பேசாமல் இருக்க வேண்டும்."

"சும்மா விளையாட்டுக்குத்தானே! விளக்கை அணைத்து விட்டதாக நினைத்துக் கொள்ளுங்களேன்!"

"அது முடியாது! அணைத்துத்தான் தீர வேண்டும்."

"சரி, அணைத்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே பூனைக் குட்டி விளக்கை அணைத்து விட்டது.

அதைக் கண்ட குரங்கு சந்தோஷமடைந்து, கர்வத்துடன் அந்த இடத்தை விட்டு அகன்றது.

சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் அந்த ஏ. ஆர். பி. குரங்கு பூனைக் குட்டியின் வீட்டுப் பக்கமாக வந்தபோது, பூனைக்குட்டி மீண்டும் படித்துக் கொண்டிருப்பதைக் கேட்டது. ஆனால் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்க வில்லை!




அதைப் பார்த்த குரங்குக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. அத்தனை இருட்டில் அது எப்படிப் படிக்கிறது என்பதை அறிய அதற்கு ஆவலா யிருந்தது. ஒரு வேளை மனப் பாடமாகக் கண்ணை மூடிக் கொண்டு படிக்கிறதோ என்னமோ என்று நினைத்து, 'டார்ச் லைட்'டை அடித்துப் பார்த்தது. என்ன ஆச்சரியம்! அது புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு கண்ணை விழித்துப் படித்துக் கொண்டிருந்தது.

"இவ்வளவு நேரமாக இருட்டில் நீ எப்படிப் படித்துக் கொண்டிருந்தாய்?" என்று குரங்கு ஆச்சரியத்துடன் பூனைக் குட்டியைப் பார்த்துக் கேட்டது.

"உமக்குத் தெரியாதா? எனக்குத் தான் இருட்டில் நன்றாகக் கண் தெரியுமே!"

"ஓஹோ! அப்படியா?"

"ஆமாம், உமக்கு விளக்கை அணைக்கச் சொல்வதற்குத் தானே அதிகாரம்; படிக்க வேண்டாம் என்று சொல்வதற்கு இல்லையே?" என்று சொல்லி விட்டுப் பூனைக்குட்டி சிரித்தது.



★ இந்த வருஷம் வைகாசிக் கோடையில் திடீரென்று புயலும் மழையும் அடித்து ரயில் பாதை கெட்டுப் போயிற்றல்லவா? அதன் காரணம் என்ன தெரியுமா? நமது கதாநாயகி—ரங்கநாயகி—சொல்கிறாள், கேளுங்கள்!

என் தெய்வம்

"கல்கி"

3

சாம்பமூர்த்தி பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தான். "என்ன? — உண்மையைச் சொல்லப் போகிறாயா? — என்ன உண்மை? ஐயோ! அவர்கள் சொன்னது நிஜந்தானா?" என்றான்.

அன்னை முன்னை விட அதிக சாந்தத்துடன் கனிந்த குரலில், "குழந்தாய்! ஏன் பதறுகிறாய்? கொஞ்சம் பொறுமையாகக் கேள்! ..." என்றாள்.

"பொறுமையா? என்னைப் பொறுமையாயிருக்கச் சொல்கிறாயா? ... கடவுளே!"

"ஆமாம், சாம்பு! பொறுத்துத்தான் ஆக வேண்டும். கடவுள் எழுதின எழுத்தை அழித்து எழுத முடியுமா?"

"கடவுள்! கடவுள்! — கடவுள் ஒருவர் இருக்கிறாரா? இருந்தால், என்னத்திற்காக அவளை நான் சந்திக்கும்படி செய்கிறார்? பிறகு இப்படிக் கோரமாகப் பிரிக்கிறார்? ... என்னத்திற்காக என்னை உயிரோடு வைத்திருக்கிறார்? டைபாய்டு சுரம் வந்ததே? அதிலேயே கொண்டு போயிருக்கக்கூடாதா?" என்று அலறினான் சாம்பமூர்த்தி.

தாயார் எங்கேயோ தொலை தூரத்திலுள்ள எதையோ பார்ப்பவள்போல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். சாம்பமூர்த்தியைத் திரும்பிப் பார்த்து, "ஆமாம், சாம்பு! உனக்கு டைபாயிடு சுரம் வந்தபோது கடவுள் உன்னைக் கொண்டு போகத்தான் பார்த்தார். நான்தான் குறுக்கே நின்று காப்பாற்றினேன். இருபத்தொரு நாள் இராத் தூக்கம் - பகல் தூக்கம் இல்லாமல் கண் விழித்தேன். டாக்டர்கள் கூடக் கை விட்டு விட்டார்கள். இன்னும் அரை மணி நேரந்தான் என்று கெடு வைத்தார்கள். நான் உன்னை விடமாட்டேன் என்றேன். நீ அப்போது கண்ணை மூடியிருந்தால் அரை நாழிக்குள் என் உயிரும் போயிருக்கும். இன்றைக்கு இந்த மாதிரி வார்த்தை உன்னிடம் கேட்டிருக்க வேண்டியதில்லை" என்றாள்.

சாம்பமூர்த்தி, "ஐயோ! அம்மா! அதையெல்லாம் இப்போது ஏன் சொல்கிறாய்?" என்றான். அவன் குரலில் முன் போன்ற வெறியில்லை. சிறிது சாந்தம் ஏற்பட்டிருந்தது.

அவன் சொன்னது காதில் விழாதவள் போல் தாயார் மேலும் சொன்னாள்:— "டைபாயிடு சுரம் வந்தபோது மட்டுந்தானா? பதினொரு வயதில் உனக்கு வயிற்றுக் கடுப்பு வந்தது. முப்பத்தைந்து நாள் கிடந்தாய். அப்போதும் யமன் வாயிலிருந்து காப்பாற்றினேன். அதற்கு முன்னால், உன் மூன்றாவது வயதில் கட்டி விழுந்தது. இரண்டரை வருஷம் ஆயிற்று குணமாவதற்கு. அந்த இரண்டரை வருஷ காலமும் நான் தேடிப் போகாத வைத்தியனில்லை. நான் வேண்டிக் கொள்ளாத கோயிலும் தெய்வமும் இல்லை. உன் அப்பா தொலைத்தது போக பாக்கியிருந்த சொத்தெல்லாம் அந்த இரண்டரை வருஷத்தில்தான் போயிற்று. கட்டி கரைந்ததுபோல் சொத்தும் கரைந்து விட்டது" என்றாள்.

"என் அப்பா ...... என் அப்பா ......" என்று சாம்பமூர்த்தியின் வாய் முணுமுணுத்தது.

"ஆமாம் குழந்தாய்! உன் அப்பாதான்!"

"அப்படியானால், ஊரார் சொல்வதெல்லாம் பொய்தானே, அம்மா!" என்று சாம்பமூர்த்தி ஆவலுடன் கேட்டான்.

"பொய்யோ? நிஜமோ? — இந்த உலகத்தில் எது பொய், எது நிஜம், — யாருக்குத் தெரியும்? நான் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விடுகிறேன், சாம்பு! அப்புறம் நீயே பொய், நிஜம் எதுவென்று தீர்மானித்துக் கொள். எங்கே

ஆரம்பிக்கிறது, எப்படிச் சொல்கிறது என்று தெரியாமல் திண்டாடுகிறேன்'' என்றாள் தாயார்.

பிறகு, இவ்விதமாக ஆரம்பித்தாள் :—

''உன் அப்பாவுக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுத்தபோது நான் ஓட்டலில் மாவு அரைக்கும்படியான கதிக்கு வருவேன் என்று என் அப்பாவும் அம்மாவும் சொப்பனத்தில் கூட நினைத்திருக்கமாட்டார்கள். என் அப்பா அம்மாவுக்கு நான் ஒரே பெண். அப்பா பணக்காரர். கிராமத்தில் ஐம்பது காணி நிலமும் இன்னும் நிறையச் சொத்துக்களும் இருந்தன. அந்தச் சொத்தெல்லாம் எனக்குத் தானே என்று, சொத்து இல்லாவிட்டாலும் படித்த பிள்ளையா யிருக்க வேண்டுமென்று வரன் பார்த்தார்கள். கடைசியில், உன் அப்பாவுக்குக் கொடுத்தார்கள். அவர் உன்னைப் போலவே பி. ஏ. பரீட்சை தேறியிருந்தார். கல்யாணம் ரொம்பப் பிரமாதமாக நடந்தது .... ''

* * *

அவர்களுடைய இல்வாழ்க்கையானது ஆரம்பத்தில் ஆனந்த மயமாக இருந்தது. அனந்தராமன் பி. ஏ. சில காலம் தாலூகா குமாஸ்தா வேலை பார்த்து விட்டு ரிவினியூ இன்ஸ்பெக்டர் ஆனான். மேலே மேலே உத்தியோக உயர்வு கிடைக்குமென்று எதிர் பார்க்கப்பட்டது. இந்த நிலைமையில் பெண்ணும் மாப்பிள்ளையும் சந்தோஷமாய் வாழ்க்கை நடத்துவதைப் பார்த்துவிட்டுச் செல்லம்மாளின் தாயும் தகப்பனும் காலமானார்கள். செல்லம்மாளுக்கு ஏராளமான மஞ்சட் காணி சொத்தையும், வீட்டுத் துணைக்கு வயதான அத்தை ஒருத்தியையும் அவர்கள் வைத்துவிட்டுப் போனார்கள்.

அதற்குப் பிறகு இன்னும் சில காலம் செல்லம்மாளின் வாழ்க்கை சந்தோஷமாக இருந்து வந்தது. நாளாக ஆக, அவளுடைய மனதிற்குள்ளே மட்டும் ஒரு அந்தரங்க வேதனை தோன்றத் தொடங்கியது. குழந்தையில்லையே என்ற வேதனைதான் அது. அத்தைக் கிழவி இந்த வேதனைக்கு அடிக்கடி தூபம் போட்டு வளர்த்து வந்தாள். ''அடி பெண்ணே! என் கண்ணை மூடுவதற்குள் உன் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்து பார்க்க மாட்டேனா?'' என்று அவள் அடிக்கடி பிரலாபிப்பாள். அதைக் கேட்கக் கேட்கச் செல்லம்மாளுக்கு என்னமோ செய்யும். பகலிலும் இரவிலும் குழந்தையைப் பற்றியே நினைக்கவும் கனவு காணவும் தொடங்கினாள்.

அண்டை அயல் வீட்டுக் குழந்தைகளைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கு ஒரு பக்கத்தில் எல்லையற்ற வாஞ்சை உண்டாகும். இன்னொரு பக்கத்தில் காரணமில்லாமல் கண்ணில் ஜலம் துளிக்கும்.

இப்படி இருக்கும் சமயத்தில் அவளுடைய வாழ்க்கையையே பாழாக்கும்படியான இடி விழுந்தது.

அனந்தராமன் மேல் லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் ஏற்பட்டது. வேலையிலிருந்து அவன் நீக்கப்பட்டதுடன், மேலே கிரிமினல் வழக்கும் நடந்தது. வழக்கு ஹைக்கோர்ட்டு வரையில் போய் முடிவதற்கு மூன்று வருஷம் ஆயிற்று. கடைசியில், தண்டனை ஒன்று மில்லாமல், உத்தியோகம் போனதுடன் அனந்தராமன் தப்பி வந்து சேர்ந்தான். இதற்குள்ளாக, செல்லம்மாளின் மஞ்சட்காணி சொத்தில் பாதி போய்விட்டது.

உத்தியோகம் போன பிறகு அனந்தராமன் வீட்டில் சுகமா யிருந்து கொண்டு காலட்சேபம் நடத்தியிருக்கலாம். பாக்கி அவ்வளவு சொத்து இருந்தது. ஆனால், புருஷன் சம்பாத்தியம் இல்லாமல் வீட்டில் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பது என்னும் விஷயம் அனந்தராமனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, வியாபாரத் துறையில் இறங்கினான். வியாபாரம் என்றால், கேவலம் ஜவுளிக் கடை—மளிகைக் கடை வைக்க அவன் விரும்பவில்லை. கமிஷன் ஏஜென்ஸி தொழிலில் புகுந்தான். பல சாமான்களுக்கு ஏஜெண்ட் ஆனான். முதலில் ஜில்லாக்களுக்கு ஏஜென்ஸி எடுத்த பிறகு, தென்னிந்தியா முழுவதற்குமே ஏஜென்ஸி எடுத்துக் கொண்டான். இதனால் அனந்தராமன் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஏஜென்ஸி தொழில் மேலும் மேலும் அபிவிருத்தி யடைந்தது. இதனால், மூலதனமும் அதிகமாகத் தேவையாயிற்று. செல்வத்தின் மஞ்சட் காணி சொத்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வந்தது. வியாபார விருத்திக்காக நிலத்தை மேலும் மேலும் விற்க வேண்டிய தாயிற்று.

இதற்கிடையில், செல்லத்தின் அத்தை "அடி பெண்ணே! உன் வயிற்றில் ஒரு குஞ்சு பிறந்து நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே? எனக்குக் கண் பார்வை மங்கி வருகிறதே!'' என்று பிரலாபித்துக் கொண்டேயிருந்தாள்.

இந்த அத்தைக்கு மைத்துனன் பிள்ளை ஒருவன் இருந்தான். அத்தை கண்ணை

மூடினால் இவன்தான் கர்மம் செய்ய வேண்டியவன். எனவே, தன்னுடைய கடமையை நிறைவேற்றுவதற்குரிய காலம் சமீபித்து விட்டதா என்று பார்க்கும் பொருட்டு இவன் அடிக்கடி இவர்கள் வீட்டுக்கு வந்து போவது வழக்கம்! அப்போதெல்லாம் செல்லத்தினிடம் உறவு கொண்டாடுவான். செல்லமும் அவனை அத்தான் என்று அழைத்துப் பிரியமாயிருப்பாள். சில சமயம் அவனுடைய நடவடிக்கை வரம்பு கடந்ததாக அவளுக்குத் தோன்றும். அவனுடைய பார்வையும் பேச்சும் விரஸமாக இருக்கும். ஆனாலும் தன்னிடம் உயிர்க்குயிரா யிருந்த அத்தையை உத்தேசித்து அத்தானுடைய அசந்தர்ப்ப நடவடிக்கைகளை யெல்லாம் அவள் பொருட்படுத்தாமல் உதாசீனம் செய்து வந்தாள்.

கடைசியில், இந்த அத்தான்தான் இடியினும் பேரிடியான செய்தியைக் கொண்டு வந்தான்.

முதலில் அவன் அதைச் செல்லம்மாளிடம் நேரில் சொல்லவில்லை. அத்தையிடம் கொஞ்சங் கொஞ்சமாக வத்தி வைத்தான். அதாவது, அனந்தராமன் வியாபார அலுவல் என்பதாகச் சொல்லிக் கொண்டு வெளியூருக்குப் போவதெல்லாம் வெறும் பொய் என்றும், தஞ்சாவூரில் ஒரு மாயமோகினியின் வலையில் அவன் விழுந்துவிட்டதாயும், செல்லம்மாளின் மஞ்சட்காணி சொத்தெல்லாம் அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறதென்றும் சொன்னான். அத்தையும் பிள்ளையும் அடிக்கடி காதைக் கடித்துக் கொள்வதையும், அத்தை "ஐயோ! இந்த அசட்டுப் பெண் இப்படிப் பேசாமல் இருக்காளே!" என்று அங்கலாய்ப்பதையும் சில காலம் வரையில் செல்லம் சகித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்தில் என்ன வெல்லாமோ சந்தேகங்கள் கொந்தளிக்கத் தொடங்கின. கடைசியில், ஒருநாள் அத்தானைக் கேட்டே விட்டாள். விஷயம் தெரிந்ததும் அவள் மகா ஆக்ரோஷத்துடன், "இப்படியெல்லாம் நீ அவர் மேல் இல்லாததும் பொல்லாததும் சொல்வதாயிருந்தால், இனிமேல் இங்கே வரவேண்டாம்!" என்றாள். அத்தான் பிரமித்தவன் போல் நின்று, "நானா? நானா இல்லாததும் பொல்லாததும் சொல்கிறேன்? கடைசியில், நானா பொல்லாதவனாய்ப் போய்விட்டேன்? உண்மையும் பொய்யும் ஒரு நாளைக்கு உனக்கே தெரியப் போகிறது. அதுவரையில் நான் இங்கே தலைகாட்டுவதில்லை" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அதற்குப் பிறகு அத்தையின் புலம்பல் அதிகமாயிற்று. "அடி பெண்ணே! உன்

தலையில் இப்படியா எழுதியிருந்தது?'' என்று ஓயாமல் அங்கலாய்க்கத் தொடங்கினான். செல்லத்துக்கோ அப்புறம் ஒரு விநாடி கூட மன அமைதி இல்லாமற் போயிற்று. அத்தான் மேல் அவள் எரிந்து விழுந்தபோதிலும், அவன் சொன்னது என்னமோ உண்மைதான் என்று அவள் உள் மனத்தில் ஏதோ ஒன்று சொல்லிற்று. மறுபடியும் அத்தானை வரவழைக்கவேண்டும், அவளைப் பற்றி எல்லா விவரமும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஒரு பக்கத்தில் மனம் துடித்தது. இன்னொரு பக்கம், தன்னுடைய அருமைத் தகப்பனார் கொடுத்த மஞ்சட்காணி சொத்தெல்லாம் இப்படியா பாழாய்ப் போய்க் கொண்டிருக்கிறது என்று எண்ணியபோது அவள் நெஞ்சம் கொதித்தது. தன் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் யாருக்குத் தத்தம் செய்திருந்தாளோ, யாரைத் தெய்வமாக எண்ணிப் பூஜித்தாளோ, இம்மைக்கும் மறுமைக்கும் தன்னுடைய ஒரே கதி யென்று யாரை நம்பி யிருந்தாளோ, அந்தப் புருஷன் இப்படித் தன்னை வஞ்சித்து வருகிறான் என்று எண்ணிய போது அவளுடைய இருதயம் படீர் என்று வெடித்துவிடும் போலிருந்தது. மற்றொரு சமயம், அவரை இவ்விதம் மருந்து வைத்து மயக்கி விட்ட மாயக்கள்ளியைக் கொன்று விட வேண்டுமென்று ஆத்திரம் உண்டாயிற்று.

அத்தான் மறுபடியும் ஏதோ வியாஜம் வைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். இந்தத் தடவை செல்லம்மாளே அவனிடம் எல்லா விவரமும் விசாரித்துத் தெரிந்துகொண்டாள்.

அடுத்த தடவை அனந்தராமன் வீட்டுக்கு வரும் போது, ''உங்களுக்கு நான் வேண்டுமா? அவள் வேண்டுமா?'' என்று கண்டிப்பாய்க் கேட்டு விடச் செல்லம்மாள் நிர்மானித்துக் கொண்டாள். அவர் சரியான பதில் சொல்லா விட்டால், அத்தையுடன் தன்னுடைய பிறந்த ஊருக்குப் போய்ப் பிதிரார்ஜித வீட்டில் தனியாக இருப்பதென்றும் முடிவு செய்து கொண்டாள்.



ஆனால், அனந்தராமன் அடுத்த முறை வீட்டுக்கு வந்தபோது செல்லம்மாள் அப்படி ஒன்றும் கேட்கவில்லை. ஏனெனில், அவன் வரும்போதே 104 டிக்ரி ஜுரத்துடன் வந்தான். வந்து படுத்தவன் படுத்தவன்தான். இருபது நாள் * படுத்த படுக்கையாய்க் கிடந்தான். செல்லம்மாள் அந்த இருபது நாளும் இராப் பகல் அவன் அருகிலேயே இருந்து சிசுருஷை செய்தாள். கழுத்துச் சங்கிலியை விற்று டாக்டர்களுக்குப் பணம் கொடுத்தாள். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. இருபத்தோராம் நாள் அனந்தராமன் கண்ணை மூடினான். அந்த மகா உத்தமியின் உள்ளத்தில் தான் குத்திய முள்ளின் கொடுமையைப் பற்றி அறிந்து கொள்ளாமலே அவன் உயிரை விட்டான். கடைசி காலத்தில், அவன் ஏதோ செல்லத்தினிடம் அந்தரங்கமாகச் சொல்ல விரும்பியதுபோல் தோன்றியது. ஆனால், அதற்குத் தக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லையோ, அல்லது அவனுக்குத்தான் தைரியம் உண்டாகவில்லையோ, தெரியாது. அவன் ஒன்றும் சொல்லவும் இல்லை; செல்லம் வற்புறுத்திக் கேட்கவும் இல்லை.

4

அனந்தராமன் காலமான பிறகு, அவனுக்குச் செய்ய வேண்டிய உத்தரக்கிரியைகளையெல்லாம் செல்லம் நடத்தியதுடன், அவன் பட்டிருந்த கடன்களையும் தீர்த்தாள். எல்லாம் போக, கடைசியில் சொற்ப சொத்துத்தான் மிஞ்சியது. அதை வைத்துக் கொண்டு கிராமத்தில் நிம்மதியாகக் காலங் கழிக்கலாமென்று சென்றாள்.

ஆனால், 'நிம்மதி' மட்டுந்தான் ஏற்படவில்லை. தெய்வமென்று போற்றிய கணவன் தனக்குச் செய்த துரோகத்தை நினைத்து நினைத்து அவள் மனம் புண்ணாயிற்று. தன் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்

காமல் போன துரதிர்ஷ்டத்தை நினைத்து அவள் வேதனை அடைந்தாள்; கடவுளையே நொந்து கொண்டாள். இதை யெல்லாவற்றையும் விட, தன் பதியின் உள்ளத்தைத் தன்னிடமிருந்து திருடிக் கொண்ட மாயக் கள்ளி யார், அவள் எப்படி யிருப்பாள், தன்னிடம் இல்லாத வசீகரம் அவளிடம் என்ன இருக்கும் என்று தெரிந்துகொள்ள அவள் மனம் துடித்துக் கொண்டே யிருந்தது.

அப்புறம் அத்தான் இரண்டொரு தடவை வந்தான். செல்லம்மாளிடம் மிகுந்த அநுதாபம் காட்டியதுடன், "இப்பேர்ப்பட்ட உத்தமிக்குத் துரோகம் செய்த பாவி"யைப் பற்றி இடித்துக் காட்டினான். அனந்தராமனுக்குச் செல்லம்மாள் எவ்விதத்திலும் கடமைப் பட்டிருக்க வில்லை யென்பதையும், இந்தக் காலத்தில் விதவா விவாகம் சாதாரணமாய் நடக்கிற தென்பதையும், தான் ஒரு பெரிய சீர்திருத்தவாதி என்பதையும் ஜாடைமாடையாய்க் குறிப்பிட்டு வந்தான்.

ஆனால், செல்லம்மாளோ அவனை விஷம் போல் வெறுக்க ஆரம்பித்தாள். தன்னுடைய மனம் இப்போது நிம்மதி யில்லாமல் தவிப்பதற்கெல்லாம் காரணம் அத்தான்தான் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றி யிருந்தது. அவனை யார் சனீசுவரன் மாதிரி வந்து அந்தத் தஞ்சாவூர்க்காரியைப் பற்றிச் சொல்லச் சொன்னது? அவன் சொல்லாம லிருந்தால் தான் புருஷனிடம் கொண்டிருந்த பக்தியில் சிறிதும் களங்கம் ஏற்படாமல் இருந்திருக்குமல்லவா? இப்போது இந்த மாதிரி தன் உள்ளத்தை அரித்து எடுத்துக் கொண்டிருக்காதல்லவா?

ஒரு நாள் செல்லம்மாள் இந்த ஆத்திரத்தையெல்லாம் அத்தானிடம் காட்டி, அவனை, "இனிமேல் இங்கே வர வேண்டாம்" என்று சொல்லி விட்டாள். அவனும் அத்துடன் ஒழிந்து போனான்.

அனந்தராமன் காலமாகிச் சுமார் ஒன்றரை வருஷ காலம் ஆயிற்று. அப்போது ஒரு அதிசயமான கடிதம் செல்லம்மாளுக்கு வந்தது. அது தஞ்சாவூரி லிருந்து வந்தது. கடிதத்தின் அடியில் "அனாதை அம்முலு" என்று கையெழுத்துப் போட்டிருந்தது. தான் சாகக் கிடப்பதாகவும், சாவதற்கு முன் செல்லம்மாளிடம் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும் என்றும், சொல்லாமல் செத்துப் போனால் தன்னுடைய நெஞ்சு வேகாது என்றும், ஆகையால் உடனே புறப்பட்டு வந்து தன்னைப் பார்க்க வேண்டு மென்றும் அந்த அனாதை ஸ்திரீ எழுதி யிருந்தாள்.

செல்லம்மாள் அந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்து யோசனை செய்து கொண்டிருந்தாள். கடிதம் எழுதியது யார் என்று அவள் மனதிற்கு உடனே தெரிந்து போய் விட்டது. அதைப் பற்றி அவளுக்குச் சந்தேகமே இல்லை. போவதா, வேண்டாமா என்றுதான் யோசனை செய்தாள். "செத்தால் சாகட்டுமே? இவளை நான் என்ன போய்ப் பார்ப்பது?" என்று ஒரு சமயம் நினைத்தாள். "இதில் ஏதாவது சூது இருக்குமோ, என்னமோ?" என்று ஒரு பக்கம் பயமா யிருந்தது. இதை யெல்லாம் மீறி, அவள் எப்படித்தான் இருப்பாள், அவளைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவல் மேலோங்கிற்று. அவள் அப்படி என்ன சமாசாரம் சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ளவும் அவா உண்டாயிற்று. அதோடு, அவள் சாவதற்கு முன்னால் நேருக்கு நேராக அவளுக்குச் சாபம் கொடுக்க வேண்டும் என்ற ஆசையும் ஒரு பக்கம் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது.



செல்லம்மாள் யோசனை செய்து கொண்டிருக்கும் போதே இரண்டாவது கடிதமும் வந்து விட்டது. உடனே புறப்பட்டு வராவிட்டால் தன்னை உயிருடன் பார்க்க முடியாது என்றும், முக்கியமான ஒரு செய்தியைச் செல்லம்மாள் தெரிந்து கொள்ள முடியாமல் போகும் என்றும் அதில் எழுதி யிருந்தது. எவ்வளவு அசௌகரிய மிருந்தாலும் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று

ரொம்பவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தது.

செல்லம்மாள் அன்றைக்கே கிளம்பி மறுநாள் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தாள். சந்துபொந்துகளுக்குப் பேர்போன தஞ்சாவூரில், கடிதத்தில் கொடுத்திருந்த விலாசத்தைக் கண்டு பிடிப்பது ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. கடைசியில், எப்படியோ கண்டு பிடித்தாள். கிழ வேலைக்காரி ஒருத்தி செல்லம்மாளை அழைத்துக் கொண்டு போய் மச்சு அறையில் விட்டாள். அங்கே ஒரு கயிற்றுக் கட்டிலில் அந்த அனுதை ஸ்திரீ படுத்திருந்தாள். உண்மையிலேயே அவள் சாகக் கிடக்கிறாள் என்பது பார்த்தவுடனே தெரிந்து போயிற்று. அந்த நிலைமையில் கூட அவள் முகத்தில் ஒரு களை இருந்தது. அதைக் காட்டிலும் அந்த முகத்தில் குடி கொண்டிருந்த சோகம் செல்லம்மாளின் உள்ளத்தின் அடிவாரத்தில் மறைந்திருந்த இரக்க உணர்ச்சியை எழுப்பிற்று. செல்லம்மாள் தான் சாபம் கொடுக்க வேண்டுமென்று வந்ததை யெல்லாம் மறந்து அவள் சொல்வதைக் கேட்கச் சித்தமானாள்.

செல்லம்மாளைக் கண்டதும் அந்தப் பெண் படுத்தபடியே இரண்டு கையையும் கூப்பிக் கும்பிட்டாள். அவளைத் தன் அருகில் உட்காரச் சொன்னாள். மிகவும் ஈனமான குரலில், குழந்தைப் பிராயத்தில் சிறு தாயார் கொடுமைகளுக்கு ஆளானதிலிருந்து தொடங்கி, தன்னுடைய துயரக் கதையை மனமனவென்று சொல்லி முடித்தாள். முடிப்பதற்குள் பல தடவை செல்லம்மாளின் கண்களில் ஜலம் துளித்து விட்டது.

கடைசியாக, உலக வாழ்க்கையின் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல் அம்முலு ரயில் தண்டவாளத்தில் விழுந்து பிராணனை விடுவதென்று நிர்மானித்தாள். அவ்விதம் தண்டவாளத்தில் படுத்துக் கிடந்தபோதுதான் அனந்தராமன் வந்து அவளைத் தொட்டு எழுப்பினார். அவளுக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லி அழைத்துப் போனார். அவளுடைய கிர்க்கதியான நிலைமையைத் தெரிந்துகொண்டு தஞ்சாவூருக்கு அழைத்துப் போய்த் தனி வீட்டில் குடி வைத்தார். வாழ் நாள் முழுவதும் அன்பான வார்த்தையையே கேட்டறியாத அம்முலு அனந்தராமனிடம் தன்னுடைய இருதயத்தை ஒப்புவித்தாள். அனந்தராமன் அடிக்கடி செல்லம்மாளைப் பற்றியும் அவளுடைய உயர்ந்த குணத்தைப் பற்றியும் அம்முலுவிடம் சொல்வதுண்டு. அப்போதெல்லாம் அம்முலுவின் மனம் படாத வேதனைப்படும் — அப்படிப்பட்ட உத்தமிக்குத் துரோகம் செய்கிறோமே யென்று. இப்படியே சில காலம் சென்றது. ஒரு நாளைக்கு அனந்தராமன் செல்லம்மாளின் அத்தானை ரயிலில் சந்தித்தார். அவனுடன் பேசியதிலிருந்து அத்தானுக்குத் தன்னுடைய இரகசியம் தெரியுமென்று அறிந்து கொண்டார். அவன் போய்ச் செல்லம்மாளிடம் சொல்லி விட்டால் என்ன செய்கிறதென்று அனந்தராமன் பீதி யடைந்தார். அம்முலுவிடம் "நானே போய்ச் செல்லம்மாளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடப் போகிறேன்; அப்புறம் நடந்தது நடக்கட்டும்" என்று கூறி விட்டுக் கிளம்பினார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஊருக்குப் போய்ச் சேரும்போதே 104 டிக்ரி சுரத்துடன் போனதாகவும், 'காலாஹலரா' என்னும் விஷ சுரம் தன்னைப் பீடித்திருப்பதாகவும், பிழைப்பது துர்லபம் என்றும் தெரிவித்திருந்தார். அதோடு செல்லம்மாளிடம் உண்மையைச் சொல்லத் தனக்குத் தைரியம் வரவில்லையென்றும், அவளுடைய மனதைப் புண்படுத்த விரும்பவில்லையென்றும், தனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அம்முலுவே எல்லாவற்றையும் செல்லம்மாளிடம் சொல்லிவிட வேண்டுமென்றும், அவள் அம்முலுவுக்கு உதவி செய்து காப்பாற்றுவாள் என்றும் எழுதியிருந்தார்.

அதற்குப் பிறகு அனந்தராமனிடமிருந்து கடிதம் ஒன்றும் வரவில்லை. துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த அம்முலு ஒரு ஆளை அனுப்பி விசாரித்துக்கொண்டு வரச் சொன்னாள். ஆள் வந்து, அனந்தராமன் இம் மண்ணுலகை நீத்த விவரத்தைக் கூறினான்.

"அக்கா! அந்த நிமிஷத்திலேயே நான் பிராணனை விட்டிருக்க வேண்டியது. ஆனால், அதோ தொட்டிலில் இருக்கிறானே, அவனுக்காக உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன். அவன் அப்போது என் வயிற்றில் இருந்தான்; ஆறு மாதம்" என்றாள் அம்முலு.

அம்முலுவின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது செல்லம்மாளின் கவனம் அடிக்கடி அதே அறையில் ஒரு மூலையில் தரையில் வைத்திருந்த தொட்டிலின் பக்கம் சென்று கொண்டிருந்தது. அந்தத் தொட்டிலில் ஒரு குழந்தை கிடந்தது. குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. அம்முலுவின் கதை முடியும் சமயத்தில் குழந்தை தன்

கண்களை மலர விழித்து அப்புறமும் இப்புறமும் பார்த்து அழத் தொடங்கியது. செல்லம்மாள் ஒரு பாய்ச்சல் பாய்ந்து தொட்டிலின் பக்கம் சென்றாள். குழந்தையின் முகம் அப்படியே அப்பாவை உரித்து வைத்ததுபோல் இருந்ததைக் கண்டாள்!

* * *

“குழந்தை! சாம்பு! அப்போது நீ உன்னுடைய குஞ்சுக் கைகளை நீட்டிக் கொண்டு, மழலை வாயால் ‘அம் — மா’ என்று சொல்லிக் கொண்டு என்னிடம் தாவி வந்தாய். நான் உன்னை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டேன். அந்த நிமிஷம் எனக்கு உலகமே மறந்து போய் விட்டது. எனக்குக் குழந்தை இல்லை என்ற குறையைப் பகவான் பூர்த்தி செய்துவிட்டார் என்ற ஒரு நினைவுதான் இருந்தது” என்றாள் செல்லம்மாள்.

கேட்டுக் கொண்டிருந்த சாம்பமூர்த்திக்கு ரோமம் சிலிர்த்தது.

5

அப்புறம் மூன்று நாள் அம்முலு உயிரோடு இருந்தாள். இந்த மூன்று நாளும் இறந்து போன அனந்தராமனைப் பற்றியே இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தார்கள். தன்னுடைய நல்ல குணத்தைப் பற்றி அனந்தராமன் அம்முலுவிடம் சொன்னதைக் கேட்கும்போதெல்லாம் செல்லம்மாளுக்கு உள்ளம் பூரித்தது. அனந்தராமன் மேலிருந்த கோபதாபமெல்லாம் போய்விட்டது. அம்முலு கண்ணை மூடிய பிறகு, செல்லம்மாள் கண்ணீரும் கம்பலையுமாய்க் குழந்தையைத் தோளோடு சாய்த்து எடுத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பிச் சென்றாள்.

ஊரில் செல்லம்மாளைப் பற்றி வம்பு வளர்க்கத் தொடங்கினார்கள். யாரோ ஒரு அனாதைக் குழந்தையை விலைக்கு வாங்கி வந்திருப்பதாகச் சொன்னார்கள். சாதி தெரியாத குழந்தையை வைத்துக் கொண்டு வளர்ப்பதற்காக அவளைச் சாதியிலிருந்து தள்ளி வைத்தார்கள். இன்னும் சொல்லத் தகாத அவதூறையும் சிலர் வாய் கூசாமல் கேலியாகச் சொன்னார்கள். அதாவது, செல்லம்மாளே குழந்தையைப் பெற்று எடுத்துக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். கிராமத்திலிருந்து செல்லம்மாள் பட்டணத்துக்குப் போனபோதும், இந்தப் பொய் அவதூறு அவளைத் தொடர்ந்து

போயிற்று. ஆனால், இதையெல்லாம் செல்லம்மாள் சிறிதும் பொருட்படுத்தவில்லை. தன்னுடைய சகல கஷ்டங்களையும் துயரங்களையும் குழந்தை சாம்புவின் ஒரு புன்சிரிப்பில் மறந்து வாழ்ந்து வந்தாள்.

* * *

இவ்விதம் செல்லம்மாள் கதையை முடித்ததும், உட்கார்ந்திருந்த சாம்பமூர்த்தி எழுந்திருந்தான். "அம்மா! கடவுள் எங்கேயோ இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். கோயிலிலும் குளத்திலும் போய்த் தெய்வத்தைத் தேடினேன். என் தெய்வம் வீட்டிலேயே இருக்கிறதென்பதை அறியாமற் போனேன். அம்மா! நீதான் என் தெய்வம்!" என்று சொல்லித் தரையில் விழுந்து தாயின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தான். செல்லம்மாள் உணர்ச்சி நெஞ்சை அடைக்க, ஒன்றும் பேச முடியாதவளாயிருந்தாள்.

பிறகு, சாம்பமூர்த்தி எழுந்து நின்று, "அம்மா! எனக்குக் கல்யாணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். வாழ்நாளெல்லாம் நான் பிரம்மசாரியாகவே இருப்பேன். உனக்குப் பணிவிடை செய்வதே என் வாழ்க்கைக் கடமை. கடவுள் அறிய......" என்று சபதம் செய்யத் தொடங்கியபோது, "நிறுத்து, குழந்தை, நிறுத்து!" என்று செல்லம்மாள் நிறுத்தினாள்.

அதே சமயத்தில், முக்கால் வாசி சாத்தியிருந்த ரேழி நடைக் கதவு படீர் என்று திறந்தது. ஸ்ரீமதி ரங்கநாயகி ஆத்திரத்துடன் உள்ளே வந்தாள்.

"ரொம்ப அழகாயிருக்கிறது! நீங்கள் பிரம்மசாரியாயிருந்துவிட்டால், என்னுடைய கதி என்ன? நானும் கன்னிகையாகவே இருக்கவேண்டியதுதான். நான் உங்களுக்காக உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டாலும், உங்கள் அம்மாவுக்குப் பணிவிடை செய்வதற்காகவே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். அம்மா! எனக்கும் நீங்கள்தான் தெய்வம்!" என்று சொல்லி ரங்கநாயகியும் செல்லம்மாளின் பாதங்களில் நமஸ்கரித்தாள். அவளுடைய தலையைத் தொட்டுச் செல்லம்மாள் ஆசீர்வாதம் செய்தபோது, கலகலவென்று அவளுடைய கண்களிலிருந்து நீர் பொழிந்தது.

சாம்பமூர்த்தி அவ்விதம் குனிந்த தலையுடன் வக்கீல் வீட்டிலிருந்து கிளம்பி வந்த பிறகு, ரங்கநாயகியை அவள் வீட்டார் ரொம்பவும் பரிகசித்துப் புண்படுத்தினார்களாம். இதனால் ரங்கநாயகியின் மனம் உறுதிப் பட்டுவிட்டதாம். "நான் அவரைத்தானே கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்? அவருடைய அம்மாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லையே? அவருடைய அம்மா எப்படியிருந்தால் எனக்கு என்ன?" என்று சொல்லிவிட்டு மற்றவர்கள் எவ்வளவு தடுத்தும் கேளாமல் அவள் சாம்பமூர்த்தியின் வீட்டுக்கு வந்தாளாம். வாசற்படிக்கு அருகில் வந்தபோது உள்ளே தாயாரின் பேச்சுக் குரல் கேட்டதாம். அங்கு நின்றபடியே செல்லம்மாள் சொன்ன கதையின் பிற்பகுதியை யெல்லாம் கேட்டு விட்டு, சாம்பமூர்த்தி சபதம் கூறும் சமயத்தில் உள்ளே வந்தாளாம்.

* * *

திருநீர் மலையில் கல்யாணம் ஆன அன்று பிற்பகல், மேற்படி வரலாறுகளை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின், "என் மாப்பிள்ளை! உங்கள் மனைவியின் வீட்டார் அப்புறம் சமாதானம் அடையவே இல்லையா? இன்னும் கோபமாய்த்தான் இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"இல்லை; ரங்கநாயகியின் உறுதியைக் கண்ட பின் அவர்கள் ஒருவாறு சமாதானம் அடைந்து விட்டார்கள். இந்தக் கல்யாணத்துக்குக் கூட வருவதாகக் கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால், திடீரென்று புயலும் மழையும் அடித்து ரயில் பாதை சீர்கெட்டு விட்டதல்லவா? அதனால்தான் வர முடியவில்லை" என்றான்.

அப்போது மணப் பெண் ரங்கநாயகி, "அதுவும் எங்களுடைய அதிர்ஷ்டந்தான். அந்தக் கும்பல் எல்லாம் வந்திருந்தால் நாங்கள் இன்றைக்கு இவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்க முடியுமா?" என்றாள்.

இந்த வருஷம் வைகாசிக் கோடையில் திடீரென்று அவ்வளவு பெரிய புயலும் மழையும் அடித்து ரயில் பாதை கெட்டதின் காரணம் அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது.

● ● ●

நமது மாகாணத்தின் சகல பண்டங்களுக்கும்
புதிய போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க்கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் உங்களுடைய வியாபார விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ்
லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்.


போன்: மதராஸ் "8536" :: தந்தி: "ROADHAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1. செரி ரோடு, சேலம்.
2. ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்.
3. கண்டோன்மெண்ட், திருச்சிறாப்பள்ளி.
4. கிருஷ்ணராயர் தெப்பகுளத் தெரு, மதுரை.
5. ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பெங்களூர்.

—: மார்க்கங்கள் :—

1. மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2. மதராஸ்—வேலூர்—சேலம்—கோயமுத்தூர்
3. மதராஸ்—திருச்சி—மதுரை—திருநெல்வேலி
4. கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5. கோயமுத்தூர் — கரூர் — திருச்சிறாப்பள்ளி
6. சேலம் — நாமக்கல் — திருச்சிறாப்பள்ளி
7. சேலம் — உளுந்தூர்ப்பேட்டை — கடலூர்
8. மதுரை — திருச்சி — தஞ்சாவூர் — நாகை
9. மதுரை — திருச்சி — கும்பகோணம்—நாகை



உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press, 116-118, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras